# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60 மலர் : 12

## உள்ளுறை


1. வடிவ நோக்கில் புதுக்கவிதை
ஓர் அரிச்சுவடி ... 529
பா. மதிவாணன்
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

2. கதையாசிரியர்களும் உத்திகளும் .... 536
(தை இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் இரா. சண்முகவேலன்
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி, பூண்டி.

3. தொல்காப்பியம் செய்யுளியல்
காண்டிகையுரை .... 545
(மார்கழி இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

4. தொல்காப்பியம் சொல்லதிகாரம்
தெய்வச்சிலையார் உரை .... 561
கரந்தைக் கவியரசு
அரங்க. வேங்கடாசலம் பிள்ளை

5. பாரதியின் புதிய ஆத்திசூடி ... 566
(தை இதழ்த் தொடர்ச்சி)
சு. பாரதி
தமிழ்த்துறை,
காயிதே மில்லத் அரசு,
மகளிர் கல்லூரி, சென்னை-2

6. தமிழ்ப்பொழில்-துணர் 60 உள்ளுறை ... 572
(துணர் 60-அட்சய ஆண்டு-மலர்கள் 1—12)
தொகுத்தவர் : இரா. குணசேகரன்,
எம். ஏ , எம். ஃபில் ஆய்வு மாணவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2017

துணர்: 60 அட்சய — பங்குனி மலர்: 12

மார்ச் — ஏப்ரல் 1987

## வடிவ நோக்கில் புதுக்கவிதை ஓர் அரிச்சுவடி

பா. மதிவாணன்
துணைப் பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சாவூர்.

### பின்னணி

புதுக்கவிதை வடிவம் குறித்து மாணவர் ஒருவரை எழுதி வருமாறு சொன்னேன். மறுநாளே வந்தார் அந்த மாணவர். "புதுக் கவிதைக்கு ஏதப்பா வடிவம்?" எனக் கேட்டு ஒருவர்

எள்ளி நகையாடியதாகவும், அதனால் தாம் குழம்பிப் போய்விட்ட தாகவும் சொன்னார். இலக்கியப் பயிற்றுவிப்பில் எழுகிற சில பிரச்சினைகளைப் பரிமாறிக் கொள்வது பயன் தரும் என்பது இக் கட்டுரையின் நோக்கம்.

## வழக்குச் சொல்லும் கலைச் சொல்லும்

சதுரம், செவ்வகம், முக்கோணம், வட்டம் போன்றவற்றை வடிவம் எனக் கொள்கிறோம். கனசதுரம், கோளம், உருளை போன்ற முப்பரிமானங் கொண்டவற்றையும் வடிவமுடையன என்கிறோம். பேச்சு வழக்கில் பொதுவாகக் கட்புலனாகக் கூடிய புறத்தோற்றத்தை 'வடிவம்' என்ற சொல் குறிக்கிறது.

இலக்கியக் கொள்கையாயினும், பிற அறிவுத் துறையாயினும் பேச்சு வழக்கிலுள்ள சில சொற்களையே - வழக்கிலில்லாத ஆழத்தோடு - வரையறுத்துக் கலைச் சொற்கள் எனக் கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. 'வடிவம்' எனும் சொல் இங்கு ஒரு கலைச் சொல்லேயாகும்.

## வரிவடிவமும் ஒலிவடிவமும்

அ - தமிழ் படிக்கத் தெரிந்தோர் இதனை ஓர் எழுத்து என்பர். இது கட்புலனாகக் கூடிய ஒரு வடிவம். தமிழ் படிக்கத் தெரியா தவரும் 'அ' என ஒலிக்கலாம். அந்த ஒலியைக் குறிக்கும் தமிழ்க் குறியீடே 'அ' என்னும் எழுத்தாகும். இதனை வரி வடிவம் என்பர். இவ்வாறு கட்புலனாகாமல் செவிப் புலனில் படுகின்ற ஒலியை ஒலி வடிவம் என்பர். இதனால் கட்புலனாகாத ஒலிக்கும் வடிவம் உண்டு என்பது தெளிவாகும்.

## பொருளும் சொல்லும்

ஈ - என்று ஒலித்தால் படிக்காத தமிழனுக்கும் பொருள் விளங்கிவிடும். இங்கு ஈ என்பது ஒரு சொல். ஒலி (வரி) வடிவம் தனித்தோ சில சேர்ந்தோ ஒரு பொருளைத் தருமாயின் அது சொல்லாகி விடும்.

மொழி, குறியீடுகளால்தான் இயங்குகிறது. ஒலிக் குறியீடு களால் பேச்சும், அவ்வொலிகளுக்கான வரிக்குறியீடுகளால் எழுத்துக்களும் ஆக்கம் பெறுகின்றன. எனவே மொழியால் வெளிப்படுத்தப்படுகிற எதற்கும் ஒரு வடிவம் உண்டு.

## புதுக்கவிதையும் பிரச்சினையும்

மொழியால் வெளிப்படுத்தப்பெறும் எதற்கும் ஒரு வடிவம் உண்டெனில் புதுக்கவிதைக்கும் வடிவம் உண்டென்பது பெறப் படுகிறது.

இங்குப் பிரச்சினை, தமிழ்ச் செய்யுளிலக்கணம் விவரிக்கும் வெண்பா முதலியவற்றின் வகைகள், இனங்கள் போன்றவையே செய்யுள் அல்லது கவிதை வடிவங்கள் என்றும், அத்தகு வரையறை யற்றவை – வரையறுக்க இயலாதவை - வடிவமுடையனவல்ல என்றும் கருதப்படுவதேயாம். அது பொருந்துமாறில்லை. ஏனெனில் மொழியால் வெளிப்படுத்தப்பெறும் எதற்கும் வடிவ முண்டென்பது மேலே தெளிவாக்கப் பட்டுள்ளது.

## எடுத்துக் காட்டும் விளக்கமும்

தீ சுடும்-இத்தொடர் குறிக்கிற பொருள் தெளிவானது; வெளிப் படையானது; அறிவுக்குப் புலப்படும் பொது உண்மையைக் கூறுவது.

தீ இனிது - இத்தொடர் குறிக்கிற பொருள் சற்றே திகைப் பூட்டுகிறது; உட்பொருளொன்றைக் கொண்டிருக்கிறது; ஒரு தனித்த உணர்வு நிலைக்குக் கொண்டு செல்கிறது. இத்தொடரில் கவிஞனின் 'தான் கலந்த' நிலையினை உணர முடிகிறது. இது கவிதை.

முதல் தொடர் உரைநடை. இரண்டாம் தொடரும் புறத் தோற்றத்தில் - வடிவத்தில் - உரைநடையே; ஆனால் அகநிலை யில் அது கவிதை. எனவேதான் அஃது 'உரைநடைக் கவிதை'; அஃதாவது 'வசன கவிதை' எனப்படுகிறது.

ஒரு படைப்பு வசன வடிவமாக அல்லது கவிதை வடிவமாக இருத்தல் வேண்டும் 'வசன கவிதை' என இரண்டும் சேர்ந்து நிற்றல் எவ்வாறு என வினவலாம் முன்னரும் பலர் வினவியுள்ளனர்.

ஈ என்பது ஓர் எழுத்து; ஒரு சொல்லுமாகும். இதனை இலக்கணம் 'ஓரெழுத்தொருமொழி' என்கிறது. ஒரு வடிவம்

எழுத்து அல்லது சொல் யாதானும் ஒன்றாக இருத்தல் வேண்டும். இரண்டும் கலந்து ஓரெழுத்தொருமொழி என்பது எவ்வாறு என்று வினவுவாரில்லையே !

## வசனகவிதையும் புதுக்கவிதையும்

வசன கவிதை, புதுக்கவிதை இரண்டும் தமிழுக்குப் புதியவை எனக் கருதப்பட்டமையால் இரண்டையும் உள்ளடக்கியதாக அவற்றைப் புதுக்கவிதை, என்னும் சொல்லால் வழங்குவதுண்டு. ஆனால் இரண்டிற்கும் சில வேறுபாடுகள் உண்டு.

| வசன கவிதை | புதுக்கவிதை |
|---|---|
| 1. உரை நடையொழுங்குக் குட்பட்டது. | 1. உரைநடையொழுங்குக்கு உட்படாத செறிவுடையது. |
| உ. உரைநடைக்கு இயல்பாக வுள்ள ஓசையைக் கொண்டது. | 2. உரைநடைக்கு மேலான நுண்ணோசை உடையது. |
| எ. கா : **காட்சி** | எ. கா : **கதவைத் திற** |

**முதற்கிளை : இன்பம்—1**

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமையுடைத்து
காற்று இனிது.
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது.
ஞாயிறு நன்று, திங்கள் நன்று
வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
கடல் இனிது. மலை இனிது. காடு இனிது.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்

கதவைத்திற, காற்றும் வரட்டும்
சிறகை ஒடி
விசிறியின்
சிறகை ஒடி
விசிறிக்குள் காற்று
மலடிக்குக் குழந்தை
கதவைத்திற, காற்று வரட்டும்
உணவை ஒழி
உடலின்
உணவை ஒழி
உணவில் உயிர்
நீருள் நெருப்பு
கதவைத்திற, காற்று வரட்டும்
சிலையை உடை
என்

மலரும், காயும், கனியும் இனியன.
பறவைகள் இனிய
ஊர்வனவும் நல்லன
விலங்குகளெல்லாம் இனியவை
நீர் வாழ்வனவும் நல்லன.
மனிதர் மிகவும் இனியர்,
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்
இளமை இனிது, முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது

— *பாரதியார்*

சிலையை உடை
கடலோரம் காலடிச் சுவடு
கதவைத்திற காற்று வரட்டும்.

— *பசுவய்யா*

உரைநடைப் பகுதிக்குள் கவிதை சான்ற வரிகள் வரலாம். புதுக்கவிதைக்குள் வசன கவிதை வரிகள் இடம் பெறலாம். வசன கவிதைக்குள் புதுக்கவிதைக் கூறுகள் காணப்படலாம். எது மேலோங்கிக் காணப்படுகிறதோ அதற்கேற்பப் பெயர் சூட்டிக் கொள்ளலாம்.

வெட்டொன்று துண்டிரண்டு என்பது போல இப்படித்தான் வடிவம் இருக்க வேண்டும் என்று வரையறுத்துக் கொண்டு, ஓர் உண்மைக் கவிதையைப் பார்க்க முயல்வது ஏற்புடையதாகாது.

## வரையறுக்க இயலுமா ?

வசன கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றை ஒருவாறு ஒப்புக் கொள்ளலாமெனினும், இன்னதுதான் புதுக்கவிதை வடிவம் என ஓரளவாவது வரையறுத்துச் சொல்ல முடியுமா ? இது தான் இங்குப் பிரச்சினை.

முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். மரபுக் கவிதை வடிவங்களை இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறுவதற்கு முன்பே அவ்வடிவங்களில் இலக்கியங்கள் தோன்றி விட்டன. அவ்விலக்கியங்களைத் தொகுத்து, வகைப்படுத்தி, பொதுமை கண்டு எழுத்து, அசை, சீர் முதலிய கூறுகளாக்கி வரையறுத்தது பின்வந்த இலக்கண அறிஞர்களின் பணி. இவ்வாறு இலக்கண வரையறை தோன்றிய பின்னரும் அவ்வடிவங்களில் இலக்கியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன,

காலந்தோறும், தேவைக்கேற்பத் தமிழில் புதுப்புதுச் செய்யுள் வடிவங்கள் தோன்றிக்கொண்டுதானிருந்தன. எனினும் அந்த மாறுதல்களுக்கு ஈடுகொடுக்குமளவுக்கு அடுத்தடுத்துப் புதுப்புது விளக்கமுறைச் செய்யுள் இலக்கணங்கள் தமிழில் தோன்றவில்லை என்பது ஒரு குறை. மொழிப் பண்டிதர்கள் யாவற்றையும் விதி முறை இலக்கணங்களாகக் கொண்டது மற்றொரு குறை.

கடந்த காலத்துக் குறைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பேசக்காரணம், இனியேனும் அக்குறைகள் போக்கப்பட வேண்டுமென்ற நோக்கம்தான். இப்போதைய புதுக்கவிதைகள் பற்றிய திறனாய்வுகள், விவாதங்கள் யாவும் தெரிந்தோ தெரியாமலோ புதுக்கவிதை வடிவ வரையறுப்பை நோக்கிய முயற்சிகளாகவும் உள்ளன. எதிர் காலத்தில் ஓரளவு வரையறைக்குட்பட்ட வடிவத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

இங்கு மற்றொன்றையும் கருத வேண்டும். பழைய யாப்பிலக்கணங்கள் கூறும் அனைத்து வடிவங்களுமே பரவலாகப் பயின்று வழங்கியவை எனக்கொள்ள இயலாது. சில எடுத்துக் காட்டுப் பாடல்களை இலக்கண ஆசிரியரோ, உரையாசிரியரோ இயற்றித் தந்திருப்பது, அவ்வடிவங்களில் பெரும்பாலும் செய்யுள்கள் செய்யப்படாமையால்தான். மேலும் பழைய யாப்பு நூல்களும் கூடக் கவிதை வடிவங்கள் மேலும் விரிந்து பெருகி, மாறி மாறிச் செல்லக் கூடும், என்பதை மறுப்பனவல்ல இன்றைய புதுக் கவிதைகள் பல தொல்காப்பியம் கூறும் செய்யுளிலக்கணத்துக்கு முரணானவையல்ல என்று கூட நிறுவிக்காட்ட இயலும்.

## வடிவமற்ற வடிவம்

கவிதை வெளிப்படுத்தப் பெறும்போது அது ஒரு வடிவங் கொள்ள வேண்டியிருக்கிறது. இது தவிர்க்க முடியாதது. ஆனால் இந்தப் புற வடிவமே தன்னளவில் ஓர் ஆதிக்கத்தைத் துய்ப்போரிடம் நிலை நாட்டிக் கொள்ள முயல்கிறது. இதன் விளைவுதான் கவிதையே வடிவத்தில் தங்கியிருப்பதாக அதனைத் துய்ப்போர் பலர் கருதும் நிலை. தமிழ்ச் சூழலில் இதனை நன்கு தெரிந்து கொள்ளலாம். கவிதை என்றதுமே வெண்பா, ஆசிரியப்பா, எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம் என்றெல்லாம் வடிவம் நினைவுக்கு வரும் போக்குத் தமிழகத்தில் நிலவியதற்குக் காரணம் இந்த 'வடிவ ஆதிக்கமே' யாம்,

மேற்கண்ட போக்குப் புதுக்கவிதைகளிலும் காணப்படுகிறது. இதனால் தான் புதுக்கவிதை பார்த்தொரு புதுக் கவிதையும், ஹைக்கூ பார்த்தொரு ஹைக்கூவும் எழுதும் போலிகள் புதுக் கவிதையுலகிலும் காணப்படுகின்றனர். இதனால் வடிவத்தையே முற்றாக மறுக்கிற போக்கொன்றும் எழுந்தது. இப்போக்கின ரீடத்தும் வரையறை எதற்குள்ளும் அடங்காத வெளிப்பாடுகளைத் தான் காண முடியுமே தவிர வடிவமே அற்ற வெளிப்பாட்டைக் காண முடியாது.

## சில குறிப்புகள்

இக்கட்டுரை 'அரிச்சுவடி' என்பதால் எளிமையாகச் சில சொல்ல முயன்றிருக்கின்றேன். இதில் வடிவத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் தந்திருக்கிறேன். இவ்விரண்டின் காரணமாக விளக்கிய முறையில் சில குறைபாடுகள் இருக்கலாம்.

மூன்றாவதாக ஒன்று, நான் எவ்வாறு வடிவத்தை-புதுக் கவிதையைப்-புரிந்து கொண்டிருக்கிறேனோ அதைக் கட்டுரை வடிவில் அசை போட்டுப் பார்த்திருக்கிறேன். வேண்டுமென்றே நான் பிறர் கருத்துக்களை மேற்கோளாகக் காட்டுவதைத் தவிர்த்திருக்கிறேன். இப்போது இலக்கியக் கல்வியில்-குறிப்பாக இலக்கிய 'ஆராய்ச்சி' யில் - மேற்கோள்கள் அடிக்குறிப்புகள் இன்ன பிறவற்றைத் தருகிற விதம் எனக்குச் சலிப்பையே தருகிறது. 'ஆராய்ச்சி' யின் பேரால் ஒரு புதுப்பண்டிதர் குழாம் உருவாகியுள்ளது.

இலக்கியத்தைப் பயில்வதை-படிப்பதை-விட இலக்கியத்தோடு பயில்வதே– பழகுவதே — முதன்மையானது. இலக்கியப் படிப்பு செல்லும் வழி. இலக்கியத்தோடு பழகுதல் சேரவேண்டிய இடம். இலக்கியத்தைப் படிப்பதற்குத் துணைபுரிவனவே கலைச்சொற்கள். இலக்கியத்தோடு பழகுதல் எனும் நோக்கத்தை மறந்து சொற்களைப் பிடித்துக்கொண்டு தொங்குவது, பல நூற்பகுதி களைத் திரட்டி வைத்துக்கொண்டு புரிந்துகொள்ளுதல் என்பதை ஒதுக்கிவிடுவது இவையெல்லாம் இப்போது ஆராய்ச்சியின் பெயரால் உருவாகும் புதுப்பண்டிதப் போக்குகளாகும். எனவே தான் புரிந்துகொள்ளுதலுக்கு முக்கியத்துவந் தந்து இதனை எழுத நேர்ந்தது.

இலக்கியத்தோடு பழகுவதற்கு உதவியாக என் கட்டுரையிற் பிழை கண்டு காட்டுவோரை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசிரியர் இரா. சண்முகவேலன்
தமிழ்த்துறை,
அ. வீ. வா நி. புட்பங்கல்லூரி, பூண்டி

## ... புலமை

கதையாசிரியன் தன் அனுபவத்தை எழுதினாலும் கண்டதை கேட்டதை எழுதினாலும், கற்பனையில் எழுதினாலும் அவை நன்கு அமையுமாறு பார்த்துக் கொள்வதில் அக்கறை காட்டுகின்றான்; சிறப்புற வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்கின்றான். அதற்கு அவன் படாதபாடு படுகின்றான். திட்டம், வரையறை எல்லாம் போட்டுக்கொண்டு முயன்றாலும் 'பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்கான' கதையாகிவிட்டது என்றும், குரங்கைப் பிடிக்கப்போய்ப் பிள்ளையாரைப் பிடித்ததுபோல் ஆயிற்று என்றும் அவன் தன் படைப்புக்களைப் பற்றிச் சொல்லிக் கொள்வது இயற்கை நிகழ்வுகளாகிவிடுகின்றன. எப்படியானாலும், தன் படைப்புப் பெயர் சொல்லும் விதத்தில் நிலைக்கவே ஒவ்வொரு கதையாசிரியனும் விழைகின்றான். அதனால் தன் திறமைகள் அனைத்தையும் செலுத்துகையில், தனது குறைபாடு தனக்குத் தடையாக இருப்பதையும், தன்னிறைவு தனக்குத் துணையாக அமைவதையும் உணர்கின்றான்.

கதையாசிரியனின் திறமைகள் யாவும் எழுத்து, சொல் ஆகிய இரண்டினாலும் அமையும் மொழி வழியே வெளிப்படுகின்றன. எனவே, அவன் தன் மொழியில் அறிவும், புலமையும் பெறுவது இன்றியமையாததாகும். அதுவும், நடப்பியலை நோக்கமாகக் கொண்டவன் உலகியலைக் கொஞ்சங்கூட மாறுபாடில்லாமல் காட்ட வேண்டும் என்று நினைக்கின்றவன் மொழியைத் தவிர வேறெதனாலும் திறந்து காட்ட வழி இல்லை.[109] 'மொழி', மக்கள் மொழி, இலக்கிய மொழி ஆகிய இரண்டினையும் குறிப்பதாகும். இவ்விரண்டும் ஒரு கதையாசிரியனுக்குச் செம்மையாக வாய்க்கு மானால், அவனது படைப்பு வெற்றி பெறுகிறது. மக்கள் மொழி அவனுடைய கதைமாந்தர்களை உயிர்த்தெழச் செய்ய, இலக்கிய மொழி அவனது புலமையின் ஆளுமையை உறுதி செய்கிறது. இந்த இருமொழி அறிவும், புலமையும் கதையாசிரியரின் படிப்பாலும், அனுபவத்தாலும், பழக்கத்தாலும் கூடுகின்றன. இவற்றில் குறைபாடு இருக்குமானால் அவனது படைப்பிலும் குறைபாடு தோன்றும்; நிறை இருக்குமானால் அவனது படைப்பிலும் நிறைவு தோன்றும். ஆகவே, சிறந்த கதையாசிரியர்கள் கண், காது

ஆகிய இரு புலன்களையும் கூர்மையாக வைத்திருப்பதோடு மொழியையுங்கூட ஒரு புலனாக ஆக்கிக் கொள்கிறார்கள். உலகத்துச் சிறந்த நாவலாசிரியர்களுள் ஒருவராகிய ஜேம்ஸ் ஜாய்ஸ் மொழியை ஆறாவது அறிவாகக் கொண்டிருந்ததாகக் கூறுவர்.[110]

கதை இலக்கியத்தில் வட்டாரக் கதைகள் (Regional Fiction) என்னுமொரு வகை உண்டு. அவ்வகைக் கதைகளில் மண்ணின் மணமும் கதைமாந்தரின் பேச்சும் செயலும் களிநடம் புரியும். அக்கதைகளை எழுதுவோர் பிற கதைகளைப் படைப்பவரைக் காட்டிலும் மக்கள் மொழியில் வல்லவராதல் கண்கூடு. அங்கு அவர்கள் பின்புலத்தைவிடவும், கதைமாந்தரின் செயல்களைக் காட்டிலும் அவர்தம் மொழிகளுக்கே முன்னுரிமை தருகின்றனர். ஆகவே, வட்டாரக் கதையாசிரியர்கள் மக்கள் மொழியை ஓர் உத்தியாகக் கையாள்வதன் மூலம் கதை இலக்கியத்தில் தனியொரு வகையினைத் தோற்றுவித்துள்ளனர். '' பேச்சு மொழி அமைப்பின் ஒரு வளர்ந்த நிலையே வட்டார வழக்குப் புதினங்கள் எனலாம்''[111] என்பாரின் கூற்று இங்கு நினைத்தற்குரியது.

ஆ. மாதவன் திருவனந்தபுரத்தில் வாழ்ந்துகொண்டு கேரள மண்ணையும் மண்ணின் மைந்தர்களையும் தமிழ்ப் புனைகதைகளில் சித்திரித்து வருகிறார். அவருடைய *புனலும் மணலும்* (1974) நாவல் வல்லமேட்டு வட்டாரத்தில் உள்ள பெருமனை ஆற்றில் மூழ்கி மணல் வாரிப்பிழைப்பு நடத்துபவர்களின் வாழ்க்கை நிலையை விவரிக்கின்றது. அந் நாவலின் கதை இலக்கிய மொழியில் எழுதப் பட்டிருப்பினும் இடையிடையே மக்கள் மொழிச் சொற்கள் கலந்துள்ளன. அப்படிப்பட்ட சொற்களுக்கு அடிக் குறிப்பில் பொருள் கூறியுள்ளார் ஆசிரியர். ஆசிரியர் நினைத்திருந்தால் அச் சொற்களைக்கூடத் தவிர்த்திருக்கலாமாயினும் வட்டாரப் பாங்கு அவ்வேறுபாட்டால் அழிந்துவிடும். ஆகவே, தாமொரு வட்டார நாவலைப் படைக்கின்றோம் என்ற நினைவுடன் எழுதுகின்ற படைப்பாளர் கதை கூறும் நிலையிலேயே மக்கள் மொழியைச் சிறுகப் புகுத்திப் படிப்பவர்களுக்குப் பயிற்சி கொடுத்துப் பழக்கிப் பெருநிலைக்குத் தயார் செய்திருக்கிறார். அந்தப் பெருநிலை என்பதுதான் கதைமாந்தர்களின் உரையாடல். அதில் முழுவதும் மக்கள் மொழியே - பேச்சு மொழியே செங்கோலாட்சி நடத்துகின்றது. சான்றாக,

எனினும், சமாளித்தவாறு, ''தொறப்பை கெடைச்சாக் கொள்ளாம்'' (தேவலை) என்று வந்த காரியத்தை நினைவூட்டினான்.

> ''தொறப்பை தரலாம். தூத்துக்கூட்ட (பெருக்கிக்கூட்ட ஆள் உண்டுமா ?''
> 
> ''அதுக்கெல்லாம் பிரத்தியேகமாயிட்டு ஆளு எதுக்கு...? எல்லா ஜோலியும் தன்னைத்தானே செய்ய நல்ல சீலம் (பழக்கம்) உண்டுப்'' இதைச் சொல்லும்போது, அங்குசாமியின் குரலில் கொஞ்சம் தெம்பு கலந்திருந்தது.
> 
> ''அய்யோ ஆளு கண்டது மாதிரி அல்லல்லோ ... இனி நிறுத்தி தாமசிச்சா கேறி (ஏறி) வந்து எடுத்தாலும் ஆச்சரியமில்ல ... என்றவாறு உள்ளே போய் துடைப்பத்தை எடுத்து வந்து அவனிடம் கொடுத்த தங்கம்மையின் சிரித்த முகம், அங்குசாமியின் மனதில் அன்றே குடியேறிவிட்டது. (பக். 61-61)

மேலே காட்டப்பட்ட பகுதியில் சில சொற்களுக்கு அடைப்புக் குறிகளுக்குள் பொருள் தரப்பட்டுள்ளது. பொதுவாக இச்சொற்கள் அம்மண்ணில் விளைந்தவை; அம்மண்ணின் மணத்தைப் பரப்புபவை. அவற்றை அறிந்து தக்கவாறு பயன்படுத்திய அந்த ஓர் உத்தித் திறத்தால்தான் ஆசிரியர் நம்மை அந்த வட்டார அரங்கிற்கு அழைத்துச்செல்ல முடிந்திருக்கிறது. ஆ. மாதவனைப் போலவே 'இலங்கையர் கோன்' தம் புனைப்பெயர்க்கேற்றாற்போல் இலங்கையின் எழிலார்ந்த மண்வளத்தை ஒரு கதையின் உருவில் படைக்கும்போது, இலக்கிய மொழியைத் தலைமையாகக் கொண்டாலும் கதைமாந்தரின் உரையாடலைப் பேச்சு மொழியிலேயே அமைத்திருக்கிறார். அந்த பேச்சு மொழி அந்த வட்டாரத்திற்குரியதாகவே உள்ளது. காட்டாக,

'' நயிந்தை, என்ன ஒரு மாதிரித் துக்கமாய் இருக்குது. என்ரை பிள்ளையை அந்தத் தேவடியாளிட்டைப் பறிச்சுக் குடுக்சேல்லை எண்டது போலை துக்கம்? என்ன நயிந்தை ?''

> என் மனம் உடனே தெளிவு பெற்றது.
> 
> '' மாதி, என்ன விஷயம்? ''
> 
> '' என்ன நயிந்தை! பாவத்துக்குப் பிள்ளைப் பெத்தா பரியாரி என்ன செய்யிறது? நான்தான் என்ரை 'சீமாட்டிக்கு' ஒரு எதிரி! வா, மேனே போவம்! இந்தக் கிழட்டுக் கட்டை இருக்கும் வரைக்கும் என்ரை 'ராசாத்தியை' ஆரேன் கொண்டு போறதெண்டால்; எடியே என்ரை ராசாத்தி, உடனை நானும் யமராசா வோடை போடுவன்.'' (– 'அனாதை')

இவ்வாறு மக்கள் மொழியினை அறிந்து அதனைத் தம் கதைகளில் ஒரு மொழிநடை உத்தியாகக் கதையாசிரியர்கள் கையாள்வதற்கு அறிதிறன் மட்டும் காரணமன்று; புலமைத்திறனும் காரணமாகும்.

காவிய காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய நாவல் ஊழி முற்றாகக் காவியத்தை விலக்கி விடவில்லை. சுருங்கச் சொன்னால், பழைய சட்டையில் புதிய பின்னல் வேலைப்பாடுகளைப் போட்டிருப்பதுபோல், காவிய வடிவில் நாவல் உரைநடைப் பூச்சுக்களைப் பூசியிருக்கின்றது. அதனால்தான், கதையாசிரியர்கள் காவியக்கூறுகளை முதலாக வைத்துக் கற்பனை வலையினைப் பின்னுகின்றனர் காவியம், கவிதைகளில் அமைந்த கதை. அந்தக் கவிதை இலக்கியத்தில் அறிவும், புலமையும் பெற்ற கதையாசிரியர்கள் கவிதை மனங்கொண்டு உரைநடையில் புதுமை செய்ய விழைந்தனர். கவிதையையும் உரைநடையையும் கலந்தனர். கவிதை என்றும் கூறமுடியாமல், உரைநடை என்றும் சொல்ல முடியாமல் இரண்டுங்கெட்ட நிலையில் மொழி நடையை உருவாக்கி, அதன் வழியாகக் கதையினை எழுதினர்; அதாவது, வசன கவிதையில் சிறுகதைகளைப் படைத்தனர். அங்கு அவர்களுக்கு கவிதை இலக்கியப் புலமை ஓர் உத்தியாக உதவிற்று. பாரதியார் *ஞானரதம் சின்னசங்கரன் கதை, சந்திரிகையின் கதை* முதலிய நாவல்களையும், *நவதந்திரக் கதைகள், சிலவேடிக்கைக் கதைகள்* முதலானவற்றையும் எழுதியுள்ளார். பாரதியாரின் கவிதையுள்ளம் கதைகளைப் படைக்கின்ற போதும் குறுகுறுக்க, அந்தக் குறுக்கீட்டால் கதை, வசன கவிதையாக மாறிவிட்டது. காற்று அப்படிப்பட்ட ஒரு சிறுகதை. அதில் ஒரு பகுதி பின்வருமாறு

காற்றுத் தேவனை வணங்குவோம்.

அவன் வரும் வழியிலே சேறு தங்கலாகாது. நாற்றம் இருக்கலாகாது அழுகின பண்டங்கள் போடலாகாது. புழுதி படிந்திருக்கலாகாது.

எவ்விதமான அசுத்தமும் கூடாது.
காற்று வருகிறான்.

அவன் வரும் வழியை நன்றாகத் துடைத்து நல்ல நீர் தெளித்து வைத்திடுவோம்.

அவன் வரும் வழியிலே சோலைகளும் பூந்தோட்டங்களும் செய்து வைப்போம்.

அவன் வரும் வழியிலே கற்பூரம் முதலிய நறும் பொருள்களை கொளுத்தி வைப்போம்.

அவன் நல்ல மருந்தாகி வருக.
அவன் நமக்கு உயிராகி வருக.
அமுதமாகி வருக.
காற்றை வழிபடுகின்றோம்.
அவன் சக்தி குமாரன்.
மகாராணியின் மைந்தன்.
அவனுக்கு நல்வரவு கூறுகின்றோம்.
அவன் வாழ்க.

இப்பகுதியைப் படிக்கையில் நமக்குக் கதை ஒன்றினைப் படிக்கின்றோம் என்கிற உணர்வு எழுவதில்லை ; மாறாகக் கவிதை ஒன்றைப் படிக்கின்ற அனுபவமே ஏற்படுகின்றது இதுபோன்ற கதைகளைப் பார்க்கும்பொழுது, சிறுகதை ரோசட்டியின் (Rosetti) பதினான்கு வரிப்பாடல் போன்றது ; தன்னுணர்ச்சிப் பாட்டிற் கொப்பானது[112] என்று கூறுவதற்கும், வ. வே. சு. ஐயர், ''கதைகள் கவிதை நிரம்பியனவாய், ரஸ ''பாவோபேதமாய் இருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்''[113] என்று கருத்துரைப்பதற்கும் நமக்குப் பொருள் விளங்குகின்றது.

சுத்தானந்த பாரதியார் சிறந்த கவிஞர். அவர் எழுதிய ஒரு சிறுகதை 'கல்யாணி நடராஜன்'. இக்கதையின் கதைத் தலைவி கல்யாணி வீணை மீட்டவும், பாடல் பாடவும் பயிற்சிப் பெற்றிருக்கிறாள். அவளுடைய பாத்திரப் படைப்புச் சிறப்படைய கதையாசிரியர் கவிஞராகையால் அவள் பாடுகின்ற பாடல்களை யெல்லாம் இரவல் வாங்காமல்—பிற கவிஞர்களின் பாடல்களை அவள் பாடியதாகக் காட்டாமல்—அவற்றையெல்லாம் தாமே இயற்றி அவள் அப்பாடல்களைப் பாடியதாகப் படைத்துள்ளார். கவிதைப் புலமை இல்லாத கதையாசிரியர்கள் பாடகனையோ, பாடகியையோ கதை மாந்தர்களாகப் படைக்கும் போது இடர்ப் பாட்டிற்குள்ளாகி மேற்கோள்களாகப் பாடல்களை எடுத்தாண்டோ, எடுத்தாளாமல் மொட்டையாக 'அவன் பாடினான்', அவள் தொடங்கினாள், என மொட்டையாகக் கூறியோ கதையாசிரியர்கள் பாடகர்களைக் கதை மாந்தர்களாகப் படைக்கையில் அக்கதை மாந்தர்களின் படைப்பு வெற்றி அடைய அவர்தம் கவிதைப் புலமை கைக்கொடுப்பதோடு உத்தியாகவும் உதவுகின்றது. சுத்தானந்த பாரதியாரின் அந்தச் சிறுகதை கீழ்க்கண்டவாறு தொடங்குகின்றது :

மல்லிகைப் பூமணக்கும்—வசந்த
மாலைப் பொழுதினிலே
அல்லியின் புன்னகையில் - என்
ஆசை தவழுதம்மா...
ஆதவன் சென்றுவிட்டான்—என்
அன்பு மனங்குளிரக்
காதலனைக் கொணர்வான்—என்
கனவு பலித்திடுமே

கல்யாணி இப்படியே பாடிக் கொண்டு ரோஜாச் செடிகளுக்கும் மல்லிகைப் புதர்களுக்கும் தண்ணீர் விடுகிறாள்.

(கல்யாணி நடராஜன்)

வங்க நாவல் வரலாற்றில் மகாகவி இரவீந்திரநாத் தாகூருக்குப் பிறகு தோன்றிய நாவலாசிரியர்களுள் 'முப்பெரும் பானர்ஜிகள்' குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். அவர்களுள் தாராசங்கர் பந்த்யோபாத்யாய் ஒருவர். அவர் எழுதிய நாவல் *கவி* (1941). இந் நாவலின் கதைத் தலைவன் நிதாயி, சமுதாயத்தின் அடிமட்டத்தில் ஆழ்ந்து கிடந்த 'டோம்' என்கிற மறக்குடியில் பிறந்தவன். அவன் தன் குலவழக்கத்தின்படிக் கள்ளனாக வளர வேண்டியவன் நேரிய வழியில் மனத்தைச் செலுத்திப் படிப்படியாக உயர்ந்து சிறந்த கவிஞன் ஆகின்றான். ஆக, நாவல் ஒரு கவிஞனின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. தாராசங்கர் அவனின் படைப்பை உயிருடனும் உணர்வு - எழுச்சியுடனும் உருவாக்க முற்படுகையில், அவருடைய கவிதைப் புலமையே அவரைக் கைத் தூக்கித் துணை புரிந்துள்ளது. கவிஞனைக் கதைத் தலைவனாகப் படைக்கின்ற கதையாசிரியருக்குக் கவிதை இயற்றுகிற வல்லமை இல்லாமல் போகலாமா? போகலாமானால் அப்படைப்புச் சிறப்படையக் கூடுமா? இந் நாவலின் முன்னுரையில்,

> '*கவி*' நவீனத்தில் மற்ற எல்லாவற்றையும் விட அதில் வரும் பாட்டுக்களே உயர்ந்த பொக்கிஷமாகும். இந்தப் பாட்டுக்கள் தாராசங்கர் திரட்டியவை அல்ல. அவரே சொந்தமாக யாத்தவை. அவர் ஒரு கவிஞரென்று யாருமே அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் இது போன்ற பாணியில் பாடல்கள் இயற்றுவதில் அவருக்கு இணை எவருமில்லை. *கவி*யில் வரும் பாடல்கள், கதையுடன் அதில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்றபடி இழைந்து செல்கின்றன. உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கு குமிழ்க்காது போனால் இவை போன்ற பாட்டுக்களை எழுதவே முடியாது.[114] என்று

குறிப்பிடப்படுவது. கவியின் சிறப்பிற்கும் பெருமைக் கும் படைப்பாசிரியரின் கவிப்புலமை முதலாய் —மூல மாய் அமைவதை வெளிப்படுத்துகிறது.

கதையாசிரியர்கள் மற்றவரின் படைப்புக்களைப் படித்து உத்திகளைப் புரிந்துக்கொண்டு தமது பங்களிப்பை வளர்த்துக் கொள்ளுவதுபோல், பிறரின் நூல்களைக் கற்றுக் தமது அறிவையும், புலமையையும் பெருக்கிக் கொள்கிறார்கள். அந்தகைய திறம் அவர்தம் படைப்புக்களின் ஒவ்வோர் அணுவிலும் பாய்ந்து வலுவூட்டி வெற்றி அடையச் செய்கிறது. வேறு வகையாகச் சொன்னால், கதைப்பொருள், கதைப்பின்னல், கதை மாந்தர் படைப்பு நோக்கு நிலை முதலிய உத்திகளை அத்திறம் உருவாக்கு கின்றது. எவ்வாறெனில், ஓர் உதாரணம் காட்டுவோம். கல்கியின் *அலைஓசையில்* (1953) வரும் சீதாவை ஆசிரியர் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களைப் படித் தறிந்தவளாகப் படைத்துள்ளார். அவள் பேச்சிலும், நினைவிலும் அத்திறம் வெளிப்படுகிறது. ஓரிடத்தில்,

> இவன் எதற்காக வந்திருக்கிறானோ என்னமோ ஒரு வேளை ஏழைப்பட்ட மனிதனாயிருக்கலாம். சாப்பாட்டுக்கு இல்லாமல் வயிற்றுப் பசியின் கொடுமை காரணமாகத் திருட வந்திருக்கலாம். பாவம்! அவனை ஏன் கொல்ல வேண்டும்! *ஜீன்வால்ஜீன்* கதையில் என்ன வருகிறது? திருடனைக் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றுகிறாரே, அந்தப் பிஷப்? நாம் மட்டும் எதற்காக இந்தப் பாதகத்தைச் செய்ய வேண்டும்?... (ப. 756)

என்று சீதா நினைக்கின்றாள். இங்கு *ஜீன்வால்ஜீன்* கதையினைக் கல்கி தாம் அறிந்ததைக் கதைமாந்தரின் வாயிலாக புலப்படுத்திக் தன்னையும் தன்னுடைய கதை மாந்தரையும் நிலை நிறுத்திக் கொண்டுள்ளார். சீதாவின் பண்பு துலங்குவதற்குக் கதை யாசிரியரின் புலமை ஓர் உத்தியாக விளங்குகின்றதன்றோ?

''தினமும் பத்து பக்கமாவது நிச்சயம் படிக்கிறேன். இன்ன புத்தகம்தான் என்று இல்லை. ஏதாவது, ரா. பி. சேதுப்பிள்ளை யின் தமிழ் இன்பமானாலும் சரி''.[115] என்று ஒரு கதையாசிரியர் சொல்லிக் கொள்வதுபோல், கங்கணங் கட்டிக் கொண்டு படித்து அல்லது நேரங்கிடைக்கின்ற வேளையில் படித்துத் திரட்டிய செய்திகளையும் கருத்துக்களையும் கதையாசிரியர்கள் தமது படைப்புக்களில் இருவகையான நோக்கங்களுக்காக[116] மேற் கோள்களாகப் பயன்படுத்துகின்றனர். 'மேற்கோள்' — ஓர் உத்தி.

இவ்வுத்தி ஓர் இலக்கியப் படைப்பாளியின் நூலறிவினை வெளிப்படுத்தும் வாயிலாகவும், அவன் தன் புலமையைத் தீர்மானிக்கின்ற அளவு கோலாகவும், அமைகின்றது. செ. மூ. ராஜு செட்டியாரின் நாகரீகம்? (1932) என்னும் நாவலில் கபிலர், வள்ளுவர், திருமூலர், மணிவாசகர், ஆழ்வார்கள், தாயுமானவர், வடலூரார் முதலியோரின் பாடல்களும், கம்பராமாயணம், கந்தபுராணம், பிரபுலிங்கலீலை, நாலடியார், திருக்கோவையார், திருக்குற்றாலப்புராணம், நல்வழி, நீதிநெறி விளக்கம் போன்றவற்றின் குறிப்புக்களும், ஆங்கிலப் பாடல்களும், பிறவும் எடுத்தாளப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால் இந் நாவல் மேற்கோள் களஞ்சியமாகத் திகழ்கிறது. பாரதியாரின் கதைகளில் புத்தர், ஔவையார், ஷேக்ஸ்பியர், தாகூர், தாயுமானவர், சங்கராச்சாரியார் எனப்பலரும் இடம் பெற்றுள்ளனர். கீதை, பைபிள், குறள் போன்ற பல நூல்களும் இடம் பெற்றுள்ளன.

ந. சிதம்பர சுப்பிரமணியனின் *மண்ணில் தெரியுது வானத்தில்* (1969) பழமொழிகள் (பக்கங்கள் 50, 189, 229, 264, 337, 345, 350), மேற்கோள்கள் (பக்கங்கள் 33, 34, 77, 78, 79, 112, 113, 138, 160, 161, 197, 238, 243, 336), பாரதியாரின் பாடல்கள் (பக்கங்கள் 88, 105, 189, 192), குறள், (பக்கங்கள் 93, 109, 253, 272), கம்பர் பாடல் (பக்கம் 242), தாயுமானவர் பாடல் (பக்கம் 349) ஔவையார் மொழி (பக்கம் 349) பெரியாழ்வார் பாடல் (பக்கம் 353) ஆகியவை எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இந் நாவலின் 29, 30, 33, 77, 78 ஆகிய பக்கங்களில் ஆங்கிலப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அருணாசல சாஸ்திரியின் மகன் நடராஜன் இப் புதினத்தின் தலைவன். நன்கு கற்றவன், அவன் சிறையில் இருந்த போது இறையைப்பற்றி ஆஸ்கார் ஒயில்டு எழுதிய பாடல் அவனுக்கு நினைவிற்கு வந்தது. இந்த இடத்தில் ஆசிரியர் அப்படியே அந்தப் பாடலை எடுத்துக் காட்டியிள்ளார்:

I know not whether laws be right
Or whether laws be wrong
All that we know who lie in gaol
Is that the wall is strong
And each day is like a year
A year whose days are long (ப. 77)

இப்படித் தான் கற்ற கவிஞனின் அனுபவத்தோடு தன்னுடைய அனுபவத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து நடராஜன் தனது மதிப்பீட்டினையும் பின்னர் வழங்குகின்றான். இவனுடைய

இத்தகைய சிந்தனைக்கு அடிப்படை எது? கதையாசிரியரின் புலமை தானே! இவனைப் படைத்த பிரமனின் ஆற்றல் தானே!! இவனைப் படைப்பதற்கும் இவனைச் சார்ந்தோரை உருவாக்குவதற்கும் அவர்தான் எத்துணை முயற்சி கொண்டிருக்கிறார்?

> பதின் மூன்றாவது அத்தியாயத்தில் நான் சேர்த்திருக்கும், கஸ்தூரியின் பெட்டி திருட்டுப்போன கதையை 'நவ ஜீவன்' பதிப்பகத்தாரின் வெளியீடான 'பாவும் பாபுவும்' என்ற தலைப்பில் முகுல்பாய் கலார்த்தி தொகுத்ளித்த புத்தகத்திலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கிறேன். அவர்களுக்கு என் நன்றி.
>
> பதினான்காம் அத்தியாயத்தில், கையாளப்பட்ட விஷயங்கள் பெரும்பாலும், முக்கியமாக, ஆசிரமத்து மரத்தை வெட்டிய துஷ்டனைப் பொது மக்கள் தடுத்த விஷயமும், கம்யூனிசம், காந்தீயம் பற்றிய விஷயங்களும் பொருளாதார சமத்வம் பற்றிய விளக்கமும், மஷ்ருவாலா எழுதிய 'காந்தியும், மார்க்ஸும்' என்ற புத்தகத்திலிருந்து அப்படியே எடுத்துப் போட்டிருக்கிறேன். இது தஞ்சாவூர் சர்வோதயப் பிரசுர வெளியீடு. இதன் ஆசிரியருக்கும், பதிப்பகத்தாருக்கும் என் நன்றி.
>
> இருபத்து நான்காவது அத்தியாயத்தில், லண்டனில், ப்ளிட்ஸ்' நடந்து கொண்டிருக்கும் பொழுது, அமெரிக்க யுத்த நிருபர், க்வென்டின் ரெயினால்ட்ஸ், கொடுத்ததாகச் சொல்லப்பட்ட செய்தி, க்வென்டின் ரெயினால்ட்ஸின் 'க்வென்டின் ரெயினால்ட்ஸ்' என்ற தம் வாழ்க்கைச் சரிதப் புத்தகத்திலிருந்து அப்படியே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கும், அந்தப் புத்தகத்தின் பதிப்பாளருக்கும் என் நன்றி[117].

என்று ஆசிரியர் கூறுவதிலிருந்து படைப்பாக்கத்திற்குரிய அவர்தம் அருமைப்பாடு புலப்படுகின்றதன்றோ? இப்புதினத்தின் உயிர், உயர்வு, வெற்றி ஆகிய அனைத்தும் கதை, கரு, கதைப்பின்னல், கதை மாந்தர் படைப்பு, மொழிநடை முதலியவற்றினைப் பார்க்கிலும் எடுத்தாளப்பெற்றிருக்கின்ற மேற்கோள்களில் உள்ளன என்றால் மிகையாகாது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(மார்கழி இதழ்த் தொடர்ச்சி)

## தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

சூ. 172: மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப.

கருத்து : பிண்டம் என்னும் வகைக்கு இலக்கணம் கூறுகிறது.

உரை : மேற்கூறிய சூத்திரம், ஓத்து, படலம் என்னும் மூன்றையும் உறுப்பாக உள்ளடக்கிய இலக்கணத்ததாயின் தலையாய தமிழ் மொழிப்புலவர் அதனைப் பிண்டம் என்று கூறுவர்.

தொன்று என்பது தொடைநயங்கருதித் தோன்று என நீண்டது. புகழொடு தோன்றும் புலவர் எனினும் ஆம்.

எ-டு : தொல்காப்பியம்

சூ: 173: பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைநடை வகையே நான்கென மொழிப.

கருத்து : அடிவரையில்லன என்றவற்றுள் நிறுத்தமுறையானே உரை வகைச் செய்யுள் ஆமாறு கூறுகின்றது.

உரை : கதை தழுவி வரும் தொடர்நிலைச் செய்யுட்கண் கதை நிகழ்வினைத் தொடர்வுபடுத்தற்குப் புலவர் இடையிடையே அமைக்கும் குறிப்புக்களான் வருவனவும், பாவாக நடைபெறாமல் செய்யுள் தொடர்களான் வருவனவும்; இயங்குதிணையும் நிலைத் திணையும் கருத்துப் பொருளும் காட்சிப் பொருளும் உள்பொருளும் இல்பொருளுமாக வரும் அஃறிணைப் பொருள்களை உயர்திணைக் குரிய பண்பும் செயலும் உடையனபோல வைத்து ஒரு பயன் கருதிக் கற்பனை மொழியாக வருவனவும்; ஆடலும் பாடலும் கொண்டு கதை தழுவி வரும் கூத்தின்கண் முன்னும் பின்னும் இடையினும் விதூடகக் கூற்றாகத் தோன்றி வருவனவும், என மேற்குறித்த உரை வழங்கும் வகை நான்கு எனக் கூறுவர் புலவர்.

எ-டு: 1) சிலப்பதிகாரத்துள் இடையிடையே வரும் உரைகளும்–கட்டுரைகளையும் போல்வன பாட்டிடை வைத்த குறிப்பு என்க. அது ஒரு சொல்லானும், தொடரானும்,

பலதொடரானும் பொருள் விளக்கத்திற்கேற்ப வரும். இடைக்கால நாடகத் தமிழுள் இவ்வகை பயின்று வருமாறு காண்க.

2) அறஞ்செய விரும்பு - ஆறுவது சினம், கண்டொன்று சொல்லேல்'' (ஆத்திசூடி) என்றாற் போலப் பாட்டினமைப்பை ஒத்துவருவன. அது ஒரு பொருளை வற்புறுத்தக் கிளந்து கூறுதலின் 'கிளவி' எனப்பட்டது.

ஒரு பாவிற்குரிய திணைதுறை முதலிய கூறுவதும் இதன்கண் அடங்கும்.

3) சிற்றூர்ப்புறங்களில் விழாக் காலத்து நிகழும் பாரதக் கதை போல்வனவாகும். இக்காலத்துச் சிறுகதை, தொடர்கதைகளை ஒக்குமெனக் கொள்க.

4) இது எள்ளல் இளமை, பேதைமை மடன் என்னும் அடிப்படையில் கேட்போர் வெண்ணகை கொள்ளுமாறு நிகழும், அதனான் இது பொருளொடு புணர்ந்த நகை மொழி எனப்பட்டது.

## நோக்கத்தக்கதொரு குறிப்பு

இச்சூத்திரத்தை அடுத்து

'' அதுவே தானும் இருவகைத்தாகும் ''

'' ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே ''

என்னும் இரண்டு சூத்திரங்கள்

உரையாசிரியன்மார் நூல்களில் உள. இவை இரண்டும் மேற் கூறிய உரைவகைச் செய்யுட்கே இலக்கணம் கூறுவதாகக் கருதி அவர்கள் உரைவரைந்துள்ளனர். இவை எவ்வாற்றானும் உரை வகைச் செய்யுள் இலக்கணங்களோடு இயையாமை சிறிது நோக்கினும் புலனாகும். இச்சூத்திரத்தின் பொருளமைப்பினை ஆழ்ந்து நோக்கின் இவை குறிப்புமொழி பற்றிய இலக்கணங்கள் என்பது புலனாகின்றது. எனவே இவ்வுரையுள் அவை ''எழுத் தொடும் சொல்லொடும்'' (சூ-177) என்னும் சூத்திரத்தின் பின் வைத்து உரை கூறப்படும்.

(இவை ஈண்டிருக்கத் தகுமெனப் பொருந்துமாறு அறிஞர் பெருமக்கள் உரைகண்டு கூறின் வணக்கத்தொடு ஏற்றுக் கொள்ளலாம்.)

சூ 174 : ஒப்பொடு புணர்ந்த உவமத்தாலும்
தோன்றுவது கிளந்த துணிவினானும்
என்றிருவகைத்தே பிசிவகை நிலையே

**கருத்து :** முறையானே பிசியாமாறு அதன் இலக்கணம் கூறுகின்றது.

**உரை:** "நொடியொடு புணர்ந்த பிசி" என மேற்கூறிய பிசி வகை நிலையாவன. வினைபயன் மெய்உருவென்னும் ஒப்புமை பொருந்த அப்பொருளை மறைந்து உவமையையே பொருள் போலக் கூறும் உவமத்தான் வருதலும், இனிமேல் நிகழ்வது இது எனக் கருதிக் கூறும் துணிவினாள் வருதலும் என இரு வகையாம்.

'தோன்றுவது' என்றது இனி நிகழ்வது இதுவெனத் தம்மறிவிற்குத் தோன்றும் கருத்தினை. அதனை உறுதியாச எண்ணிக் கூறுதலின் துணிவு எனப்பட்டது. பித்து-பிச்சு பிசி என நின்றது. பேதுறச் செய்வது பித்து, ஆகலின் பேதுறக் கூறும் இதனைப் "பிசி" என்றார்.

எ-டு : பிறையைக் கௌவி மலை நடந்தது. யானை
பெட்டிக்குள் வைத்துக் கட்டிய முத்து. பற்கள்
இவை ஒப்பொடுபுணர்ந்த உவமத்தான் வந்தன,

குஞ்சுக்குச் சிறகு முளைத்தால் கூட்டில் இருக்காது.
கரும்புக்கட்டி வெளியிற் கிடந்தால் எறும்புக்கூட்டம் தானே வரும்

இவை முறையே குழந்தை வளர்ந்தால் வெளியே விளையாடச் செல்லும் என்பதும் செல்வம் வெளிப்படையாக இருந்தால் பலரும் பறித்துச் செல்வார் என்பதும் ஆம்

இவை தோன்றுவது கிளந்த துணிவு
துணிவுக்குப் பேராசிரியர்
நீராடான் பார்ப்பான் நிறஞ்செய்யான் நீர்ரடின்

ஊராடும் நீரிற்காக் கை" என்பதைக் காட்டினார்.
அஃது ஒப்பொடு புணர்ந்த இயல்பேயன்றித்தான் கருதிக் கூறிய துணிவாகாமையறிக.

நொடியொடுபுணர்ந்த பிசி என்றாராகலின் உவமம் பற்றி வரும் விடுகதைகள் யாவும் பிசியாதற்கு ஒக்கும் என்க. அங்ஙனம் உருவகம் பற்றி வருவனவும் ஒக்கும். என்னை ! உருவகம் என்பது

உவமத்தின் வேறுபாடேயாதலின் என்க. "வேறுபட வந்த உவமத் தோற்றம்" "என ஆசிரியர் கூறியதும் காண்க.

சூ. 175: நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

கருத்து: முறையானே முதுமொழியாமாறு அஃதன் இலக்கணங் கூறுகின்றது.

உரை: யாதானுமோர் ஏதுவைக் கருதி வரும் எனப் பெற்ற முதுமொழியாவது; கருத்து நுட்பமும் சொற்சுருக்கமும் பலகாற் பயின்ற விளக்கமுடைமையும் உணர்தற்கு எளிமையும் ஆகிய பண்புகளொடு விளக்கமாகத் தோன்றிக் கூறுவோர் தாம் கருதிய பொருட் பயனை முடித்தற்கு வரும் இயல்பினது ஏதுநுதலிய முதுமொழி என்று கூறுவர் புலவர்.

இது பெரும்பான்மையும் பழமொழியாயும் சிறுபான்மைக் கட்டுரை (இடித்துரை) யாயும் வரும்.

எ-டு: குலவிச்சைக் கல்லாமற் பாகம்படும்
பாம்பறியும் பாம்பினகால்,
ஞாயிற்றைக் கைம்மறைப்பாரில்,
கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறு,
வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல, எனவரும்.

சூ. 176: நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திர மென்ப.

கருத்து: முறையானே மந்திரச் செய்யுள் ஆமாறு கூறுகின்றது,

உரை: உவந்து கூறினும் முனிந்து சொல்லினும் அச்சொற் பொருள் தப்பாமல் நிறைவேறும் மொழியினைக் கூறும் ஆற்ற லுடைய மாந்தர் தம் ஆளுமையாற் கிளந்த மறைமொழியே மந்திரமாம் எனக் கூறுவர் புலவர்.

மந்திரம் என்றது மந்திரச் செய்யுளை. பொய்யறிவாளர்க்குத் தன் பொருட்பயனை மறைத்து நிற்றலானும், இவ்வுலகியலுக்கு முரணாக மறுத்து நிற்றலானும் மெய்யறிவுநூல 'மறை' எனப்பட்டது,

நாய்களால் ஒற்றுமை உணர்வுடன் வாழ முடியாது. எனவே உரிமை உணர்வும் கூட்டுணர்வும் வளரவேண்டும் என்று விரும்பிய பாரதி 'ஞமலி போல் வாழேல்' என்றார். முயற்சி செய்து செயலில் இறங்கும் போது இறுதிவரை துணிந்து செய்ய வேண்டும். ஒவ்வொரு செயலிலும் இடையில் விட்டு விடுபவனாக இருந்தால் அவன் வெற்றி அடைதல் அரிது எனவே 'நுனியளவு செல்' என்று கூறினார்.

வறுமையின் கொடுமையை உணர்ந்தவர் பாரதி.பொருளின்மையால் தான் பட்ட இன்னலைத் தம் சுயசரிதையில்

''பொருளி லார்க்கிலை யிவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்ம் மொழியன்று காண்
பொருளி லார்க்கின மில்லை துணையிலை
பொழுதெலா மிடர் வெள்ளம் வந்தெற்றுமால்
பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்[26]

என்று உணர்ந்து கூறுகிறார்.எனவே பணத்திணைப் பெருக்கும் வழிகளைத் தேடவேண்டும் என்கிறார். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாடிய பாரதி உழவுத்தொழிலின் சிறம்பினை உணர்ந்து 'மேழி போற்று' என்று கூறியதில் வியப்பேதுமில்லை. 'ஆசைதான் அழிவுக்குக் காரணம்' எனவே ஆசையை முற்றிலும் விட்டுவிட வேண்டும் என்று பெரியோர் கூறினர். இதைத் தான் பாரதி 'வௌவுதல் நீக்கு' என்று இறுதி அறமாகக் கூறினார். இவை அனைத்தும் சமுதாயமக்களுக்காகவே பாரதி கூறிய கருத்துக்கள் ஆகும்,

மேலும் சினத்தின் கேட்டைப் பற்றிப் பாரதி

'சினங் கொள்வார் தம்மைத் தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவா ரொப்பாவார் ; சினங்கொள்வார் தாம்
மனங்கொண்டு தங்கழுத்தைத் தாமே வெய்ய
வாள்கொண்டு கிழித்திடுவார் மானுவாராம்' [27]

என்று அனுபவித்துக் கூறுவது போல் கூறுகிறார். அதே பாரதி 'ரௌத்திரம் பழகு'[28] என்று ஆத்திசூடியில் கூறுகிறார் சினத்தினால் ஏற்படும் கேடுகளை உணர்ந்த மக்கள் சினம் கொள்ளாமல் உணர்ச்சியற்று இருந்துவிடக் கூடாது.

---

26. பா - கவிதைகள் - சுயசரிதை - 43
27. பா - கவிதைகள் - பாரதி அறுபத்தாறு - 8
28. பா - கவிதைகள் - புதிய ஆத்திசூடி - 96

என்பதால் தேவையானபோது சினங்கொள்ளும் முறையைப்பழகு என்று புதிய நோக்கில் கூறுகிறார். 'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாய்விடும்' நம் உடல் ஊட்டத்திற்குத் தேவையான சத்துப்பொருள் குறிப்பிட்ட அளவு உடம்பில் இருந்தால் ஆரோக்கிய மான உடம்பு என்கிறோம். குறைவாகவோ அதிகமாகவோ போய் விட்டால், அதை நோய் என்று தானே கூறுகிறோம். சினமும், சமுதாயத்தில் வாழ்கின்ற மனிதனுக்கு மட்டுமன்று, நம் பாரதத் தாயின் விலங்கொடிக்கவும் தேவை. சினங்கொள்ள வேண்டிய இடத்தில், சினங்கொள்ளப் பழக வேண்டும் என்ற பொருளில் 'ரௌத்திரம் பழகு' என்று கூறுகிறார்.

பாரதத்தில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சிபெறவேண்டும் என்பதற்காக மேலும் சில அறிவுரை களைக் கூறுகிறார். சிறு குழந்தைகளுக்கு உலகத்தைப் பற்றிய பல்வேறு செய்திகளும் தெரிந்திருக்க வேண்டும் என்பதால், சரித்திரத் தேர்ச்சி கொள்'[29] என்றார். கடந்த கால நிகழ்ச்சிகள் தாம் வரலாற்றிற்கு அடிப்படை, மறைந்த தலைவர்களின் வரலாற்றையும் நாட்டின் வரலாற்றையும் படிக்கும் குழந்தைகள் உள்ளத்தில் உணர்ச்சி தோன்றும் அத்துடன் 'சோதிடந்தனை இகழ்'[30] என்று கூறி மூடநம்பிக்கையை எதிர்க்கிறார். சோதிடத்தில் அளவு கடந்த நம்பிக்கை வைப்பது தன்னம்பிக்கையை இழக்கச் செய்யலாம். கோள்களின் ஆதிக்கத்தில் நம்பிக்கை வைக்கும்போது, நம் உடல் வலிமையும் வீரமும் குறைந்து மதிப்பிடப்படுகிறது. இதனால் சொந்தமாகச் செயல்படுகின்ற போக்கு குறைகிறது.

பாரதியார் கலைத்துறையில் ஆர்வம் காட்டியதோடு நில்லாமல் நாட்டின் அறிவியல் வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டினார். வான நூல் பயிற்சியையும் உலோக நூலறிவையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினார்.[31] அவர் அறிவியல் தொடர்பான அனைத்தையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தார். இறைவனைப் பற்றிக் கூறுகின்ற வேதங்களில் புதுமை செய்ய வேண்டும் என்றும் கூறினார்- வேதங்கள் என்றால் பழையவற்றைத் தான் கூறும். அதில்கூட புதுமையைச் செய்ய விரும்பினார்.

இவ்வாறு புதிய ஆத்திசூடியில் பாரதியை முழுமையாகக் காண்கிறோம். பாரதியார் கவிதைகளில் அங்கங்கே சிதறிக் கிடக்கின்ற முத்தான கருத்துக்கள் அனைத்தையும் மாலையாகக்

---

29. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி — 25
30. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி — 35
31. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 104, 101

கோத்து ஆத்திசூடியாகச் சூட்டுகிறார். இதில் வருகின்ற 110 தொடர்களும் மனிதன் எப்படி வாழவேண்டும் என்று எழுதி வைக்கப்பட்ட பட்டயங்கள். இதில் உடன்பாடாக 87 கருத்துக் களையும், எதிர்மறையாக 23 கருத்துகளையும் மக்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறார். ஆத்திசூடி முழுமையும் பார்த்தால் அங்குப் பாரதியின் உறுதி, துணிவு, வீரம், புரட்சி இவை மிகுந்திருப்பதைக் காணலாம்.

---

## திருமுறை தில்லையம்பலம் ஏறியது

தேவார திருவாசக முதலான தெய்வத் திருமுறைகள் தில்லை நடராசர் கோயிலில் கீழே நின்றுதான் பாடும் வழக்கம் இதுவரை இருந்து வந்தது. திருமுறைகளை அம்பலத்தின்மேல் பாடத் தீட்சிதர்கள் அனுமதிப்பதில்லை. இது திருமுறைக்கு மதிப்புக் குறைவாக இருந்தது. மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கனார் தலைமையில் திருமுறை இயக்கக்குழு போராடத் தொடங்கியது. திருமுறைகள் குடமுழுக்கு விழாவிற்குள் தில்லையம்பலம் ஏறாவிட்டால் உண்ணாநோன்பு தொடங்கவும் முடிவு செய்தது. மக்களும், மாணவர்களும் திரளாக இதற்கு ஆதரவு தந்தனர். தமிழக அரசும் இக்கோரிக்கைக்கு ஒத்துழைத்தது.

கோட்டாட்சி உயர் அலுவலர்கள் பொதுக்குழுத் தீட்சதர் களிடம் தமிழுக்கும், திருமுறைக்கும் உரிய மதிப்புக் கொடுக்க வேண்டும் எனவும் 11 — 2 — 87 ஆம் நாள் நடைபெறும் குடமுழுக்கு இடையூறின்றி நடைபெற வேணடும் எனவும் எடுத்துச் சொன்னார்கள். உண்மை நிலையை உணர்ந்த தீட்சதப் பெருமக்கள் இசைந்தனர் 1 — 2 — 87 ஆம் நாள் முதல் திருமுறைகள் தில்லையம்பலத்தின் மேல் தீட்சதர்களால் பாடப் பெறுகின்றன. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மாற்றமாகும். இது பல்லாயிரக் கணக்கான மக்கட்கு மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் தந்தது:

தெய்வத் தமிழ்த்திருமுறை தலைமையான தில்லைக் கோயிலில் அம்பலம் ஏறி முழங்கத் தொடங்கிவிட்டது. இனி எல்லாக் கோயில்களும் தமிழருச்சனையைத்தானே விரைவில் மேற் கொள்ளும் எனவும் இதற்கு ஓர் இயக்கம் தேவைப்படாது எனவும் நம்புகின்றேன். மக்களின் தமிழ்ப்பக்குவத்தையும் அரசின் தமிழுறுதியையும் கோயிலாளர்கள் புரிந்து செயல்படுவார்களாக.

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

---

# தமிழ்ப்பொழில்—துணர் 60 உள்ளுறை

(துணர் 60 — அட்சய ஆண்டு — மலர்கள் 1—12)


| ஆசிரியரும் கட்டுரையும் | பக்கம். |
|---|---|
| அழகப்பராசு, த., | |
| தாலாட்டு இலக்கியம் காட்டும் இலக்கியக் கொள்கை | 109, 174 |
| இராசகோபாலன், இரா [அரசக்கண்ணன்] | |
| இரட்டைப் பாட்டுக்கள் | 219, 251 |
| முல்லைப் பாட்டின் தலைவன் சோழனா? | 325 |
| இராமமூர்த்தி, இரா., | |
| வினையே செய்வது ..நூற்பா ஒரு விளக்கம்... | 1 |
| இராமநாதன், ச., | |
| அனைத்து இந்தியத் தமிழ்ச் சங்கங்களின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு | 337 |
| இளந்திரையன், சாலை., | |
| இந்தியால்வரும் கேடு | 170 |
| புதிய கல்விக்கொள்கையில் பாடமொழி பற்றிய குழப்பங்கள் | 329 |
| கணபதி ஸ்தபதி, வை., (கடிதம்) | 423 |
| காளிதாசன், ஆறு., | |
| ஆடல் வணக்கம் | 311 |
| குணசேகரன், மா., | |
| சிற்பத்தில் காணப்படும் அணிகலன்கள் | 195 |
| குமரன், ப., | |
| சுந்தரரின் பக்திக்கோட்பாடுகள் | 333, 350 |
| குருநாதன், இரா., | |
| தமிழகத்திற் கதாகாலட்சேபம் | 68 |
| குழந்தைவேலன், க., | |
| நடுகற்குறிகளும் சுடுமட்கலங்களும் | 417 |
| கோவிந்தராசனார், சி , | |
| கல்வெட்டுகள் தரும் கோயில் நிவந்தங்களும், ஆட்சிமுறைகளும் | 49 |

| ஆசிரியரும் கட்டுரையும் | பக்கம் |
|---|---|
| சண்முகம் பிள்ளை, மு., | |
| மலைமுதல் மனைவரையிலும் | |
| கண்ட பல கடவுளர் | 7 |
| சண்முகவேலன், இரா., | |
| கதையாசிரியர்களும் உத்திகளும் | 97, 160, 208 |
| | 261, 294, 355 |
| | 413, 463, 536 |
| சுபாஷ் சந்திரபோஸ், ச., | |
| குற்றியலுகரமும் புள்ளியும் | 433 |
| செல்வராசு, நா., | |
| சங்க இலக்கியத்தில் ஆலமர் கடவுள் | 289 |
| சோமசுந்தரம், கே., | |
| குயிலின் பாட்டு | 230, 274 |
| துரை அரங்கனார், மொ. அ., | |
| இரண்டு ஐயங்களும் அவற்றின் தெளிவும் | 30 |
| கூற்றம் உதைக்கும் குறி | 60 |
| திருநாவுக்கரசு, க. த., | |
| கல்லணையைக் கட்டியது யார் ? | 385 |
| பாரதி, சு., | |
| பாரதீயின் புதிய ஆத்திசூடி | 475, 566 |
| பால சுந்தரம், ச., | |
| பதிப்பாசிரியர் குறிப்பு | 27 |
| தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை | 33, 81, 122, |
| | 177, 283, 315, |
| | 361, 425, 545, |
| ஐந்திறம் (ஒரு கண்ணோட்டம்) | 145 |
| அறிவியல் தமிழ் ஓர் மதிப்புரை நோக்கு | 451 |
| களஞ்சியம் - முதலிதழ் மதிப்புரை | 458 |
| சிந்தையுள் ஒளிரும் செம்மல் | 481 |
| மதிவாணன், பா., | |
| வடிவ நோக்கில் புதுக்கவிதை ஓர் அரிச்சுவடி | 529 |
| மாணிக்கம், வ. சுப., | |
| புதிய கல்விக் கொள்கையா ? | |
| புதிய ஓதுக்கற் கொள்கையா | 339 |
| மாதையன், பெ., | |
| புறத்திணைத் துறைப் பாகுபாடும் | |
| சமூகப் பின்னணியும் | 377, 439 |

| ஆசிரியரும் கட்டுரையும் | பக்கம் |
|---|---|


முகமது உசேன், மு. அ.,
வட்டாரவியல் தத்துவம் பற்றிய ஓர் அறிமுகம் 400

முத்துக் குமாரசாமி, N.,
'அறிவியல் தமிழ்' பற்றி எனது கருத்து 457

ரேணுகா தேவி, வீ.,
தமிழில் பெயரடைகள் 63

வசந்தகுமாரி, கே.,
மரபுக்கவிதையும், புதுக்கவிதையும் ஒப்பீடு 241

வரதராசன், பெ. கு.,
ஆசிரிய விருத்தமும் கட்டளைக் கலித்துறையும்
(ஓர் ஆய்வு) 18

வேங்கடபதி, சி.,
கரந்தைக் கவியரசு
அரங்க. வேங்கடாசலம் பிள்ளை
வாழ்வும் பணியும் 484

வேங்கடாசலம் பிள்ளை, அரங்க.,
(கரந்தைக் கவியரசு)
கவியரசின் கவிதைகள் 498
நமது பொழில் 501
தமிழிற் பிறமொழிக் கலப்பு 506

தொல்காப்பியம் ; சொல்லதிகாரம் :
பேராசிரியருரை 514
நற்றாயும் செவிலித்தாயும் 525

தொல்காப்பியம் : சொல்லதிகாரம்
தெய்வச்சிலையாருரை 561



தொகுத்தவர் : இரா. குணசேகரன், எம். ஏ.,
எம். ஃபில். ஆய்வாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி,
தஞ்சாவூர்.


துணர் 60, மலர் 1, 2 ஆகியவற்றில் திருவள்ளுவர் ஆண்டு - 2017 எனவும் மலர் 10, 12 ஆகியவற்றில் திருவள்ளுவர் ஆண்டு - 2018 எனவும் திருத்திக் கொள்க.

# தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U. S. $ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75/—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U. S. $ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U. S. $ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68/—
   — கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U. S. $ 12

விற்பனைக் கழிவு : அஞ்சல் வழி 25%
நேரில் 30%
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

## Statement about ownership and other particulars about Newspaper

## TAMIL POZHIL

### Form IV

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Karanthai Tamil Sangam,<br>Karuntattamkudi,<br>Thanjavur-2. |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | Thiru M. Chandramouli, |
| | | : | Proprietor, |
| | | : | Gemini Printing House. |
| | Nationality | | Indian |
| | Address | : | 1837/1, West Main Street, |
| | | : | Thanjavur - 613 009. |
| 4. | Publisher's Name | : | Thiru S. Ramanathan, |
| | Nationality | : | Indian |
| | Address | : | Thiru. S. Ramanathan,<br>Chairman,<br>Karanthai Tamil Sangam,<br>Thanjavur - 613 002. |
| 5. | Editor's Name | : | Thiru. C. Balasundaram, |
| | Nationality | : | Indian |
| | Address | : | 367, West main st, |
| | | : | Thanjavur-613 009. |
| 6. | Name and address of individuals who own the newspaper and partners | : | Karanthai Tamil Sangam (Regd) |
| | | : | Karunthattamkudi. |
| | | : | Thanjavur. Pin : 613 002. |

I S. Ramanathan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**S. Ramanathan,**
Publisher.

மறைநூல் இவ் ஆசிரியர் காலத்து நான்கு கூறாக வகுக்கப் பட்டிருந்தமை பனம்பாரனார் பாயிரத்தால் புலனாகும். 'மாந்தர்' என்றது ஈண்டு மந்திரத்தினையுடையார் என்னும் பொருட்டாய் நின்ற உட்பிணைப்புச் சொல். (மந்திரத்தார் = மாந்தர்) மாந்தர் மக்கள் என்புழிவரும் மாந்தர் பல்லோரறியும் சொல். அது வேறு இது வேறு "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" —என்றது காண்க. ஆணை என்றது மெய்ஞ்ஞான உணர்வை ஆளும் ஆளுமையை (வீறு) உணர்த்தி நின்றது. 'ஆண்மை' என்பது குணப் பண்பையும் ஆணை என்பது செயற் பண்பையும் உணர்த்தும்.

மந்திரம் :- அகத்து உறுப்பு (கரணம்) நான்கனுள் சித்தத்தின் செயற்பாடு. அஃது அகத்தெழுவளியிசையால் அரில்தப நாடின் அகச்செவிக்குப் புலனாக அமைந்து நிகழும் நுண்மொழி.

அவற்றை மெய்தெரிவளியிசையான் புறச்செவிக்குப் புலனாக அவர் அருளுதலான் 'மறைமொழி' என்றார்.

இம்மந்திரங்கள் ஒழுக்கம் (சரியை) வழிபாடு (கிரியை) உணர்வை ஒன்றுபடுத்தல் (யோகம்) மெய்யறிதல் (ஞானம்) ஆகிய நால்நெறிக்கும் வெவ்வேறாக அமைந்து நிகழும்.

அவற்றுள் இம்மைப் பயன் விளைக்கும் தேவரைப்பராவும் பூசனைக்கும் வேள்வி முதலாய காரணங்கட்கும், பிணி முதலிய வற்றை நீக்குவதற்கும் உரியவாய் அவ் அருளாளர்களாற் கூறப் பெற்ற மந்திரச் செய்யுளை இலக்கிய வகையுள் ஒன்றாகத் தொன்று மொழிப்புலவோர் கொண்டமையான் அதனை ஆசிரியர் எடுத்தோதினார் என்றறிக.

தமிழ் மந்திரங்கள் யாவும் வடமொழிப்படுத்தப்பட்டமையின் மந்திரங்கட்கு இலக்கியம் காட்டற்கு அரிதாயிற்று.

அம்மந்திரங்களை இடைவைத்து வெண்பாவானும் ஒருபோகு கொச்சகத்தானும் அமைத்த பாக்கள் வாய்மொழியாய் அங்கத வகைப்பாட்டினுள் அடங்கும். திருமூலர் அருளிய திருமந்திரச் செய்யுட்கள் அடிவரையறைப்பட்டு நிகழ்தலின் பாவுள் அடங்கின.

அடிவரையின்றி வரும் மந்திரச் செய்யுட்களை நிறைமொழி மாந்தர் வாய்க் கேட்டறிக.

வாய்மொழிப் புலவநின் றானிழற் றொழுதே (பரிபா-1)
மாயா வாய்மொழி உரைதர வலந்து
வாய்மொழி ஓடை மலர்ந்த
தாமரைப்பூவி னுட்பிறந்தோனும், தாதையும்
நீயென மொழியுமால் அந்தணர் அருமறை (பரி-3)

என்னும் பரிபாடற்றொடர்களால் மந்திரங்கள் தமிழில் இருந்தமை போதரும்.

சூ. 177 : எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழி என்ப.

கருத்து : கூற்றிடை வைத்த குறிப்புமொழியாமாறு அதன் இலக்கணங் கூறுகின்றது.

உரை : எழுத்திலக்கணத்தோடும் சொல்லிலக்கணத்தோடும் இயையாததாகிச் சொல்லினது செம்பொருளைவிட்டு அதன் புறத்ததாய்க் கேட்போர்க்குத் தன்கருத்துப் புலனாகுமாறு வருவது குறிப்பு மொழி என்று கூறுவர் புலவர்.

சொல்லின் முதனிலை இடைநிலை இறுதிநிலை மயக்க மரபு முதலிய எழுத்திலக்கணத்தையும்; எழுவாய், பயனிலை, வேற்றுமை மரபு, முதலிய சொல்லிலக்கணத்தையும் நோக்காமல் பொருட் குறிப்பு மட்டுமே நோக்கி வருதலின் எழுத்தோடும் சொல்லொடும் புணராதாகி என்றார். எழுத்து, சொல் என்பவை ஆகு பெயர்கள்.

அடிவரையறையுடைய பாட்டின்கண் திணையுணரும் வண்ணம் உறுப்பாகப் புணர்க்கப்படும் உள்ளுறை உவமமும் இறைச்சியும் முன்னமும் பிறவும் வடிவு திரிந்து அடிவரையறை யில்லாதனவாய் வரின் அவை குறிப்பு மொழியாம்.

இதனைக் கூற்றிடை வைத்த குறிப்பென ஆசிரியர் ஓதினா ராகலின் 'கூற்று' என்னும் செய்யுளுருப்பு அகப்பொருட்கே சிறந்துரிமையாகித் தலைவன் கூற்று முதலாக வருவன. ஆதலின் அக்கூற்றினை இடமாகக் கொண்டும் இச்செய்யுள் வகை தோன்றும் என்பது பெறப்படும்.

சூ. 178 : அதுவே தானும் ஓரிரு வகைத்தே

கருத்து : குறிப்புமொழியாகிய செய்யுள் இருவகைப்படுமென் கின்றது.

உரை : மேற்கூறிய குறிப்பு மொழி கூறுவோர்பகுதியான் இருவகைப்படும்.

சூ. 179: ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலைஇன்றே

கருத்து : குறுப்பு மொழியின் வகை இவை என உணர்த்து கின்றது.

உரை : மேல் இருவகைத்து எனப்பட்டவற்றுள் ஒருகூறு செவிலிக்குரியதாக நிகழும். மற்றொரு கூறு வரைவின்றி யாவர்க்கும் உரியதாக நிகழும். செவிலி என முற்கூறியதனான் பின்னர்க் கூறிய யார்க்கும் என்றது அகப் பொருளிற் கூற்றிற்குரிய ராக வருவோரே என்பது பெறப்படும். மற்றென்பதனை பின்னின்ற ஒன்றே என்பதனொடு கூட்டுக-அசையாகக் கொள்ளினுமாம்.

இக்குறிப்பு மொழியமைந்து அடிவரையின்றி வந்த இலக்கியம் இக்காலத்து அரிதாயினமையின் வந்துழிக் காண்க. பாட்டிடை வந்த குறிப்பு இறைச்சியாயும், சுட்டாயும் நகையாயும் அடங்கலின் இஃது உரையின்கண் வரும் என அறிக.

சூ. 180: பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே.

கருத்து : இதுகாறும் அடிவரையில்லனவாகிய செய்யுளைப் பற்றிய மரபுகளைக் கூறி இனி அடிவரையறையுடைய தெனினும் ஆசிரியம் முதலிய பாட்டுக்களைப் போலாமல் இசைத்தமிழ் மரபிற்றோன்றி இயற்றமிழ்ப் பகுதியாக வழங்கும் பண்ணத்தி என்னும் பாவகையின் இலக்கணங் கூறத் தொடங்கிப் பண்ணத்தி ஆமாறு இது எனக் கூறுகின்றார்.

உரை : அறுவகைப் பாக்களுக்கும் உரியவாக அவற்றிடைக் கலந்த அறமுதலாய மும்முதற்பொருளையும் அகமும் புறமுமாகிய திணைப் பொருளையும் தமக்குப் பொருளாகக் கொண்டு அகவல் முதலாய பாட்டினைப் போல யாப்பமைதி உடையவாய் வருதல் பண்ணத்தி என்னும் பாவகையாகும்.

மரபு, தூக்கு, பா, திணை, கைகோள் என்றின்னோரன்ன உறுப்புக்களின்றி அசையும் சீரும் நோக்கும் வண்ணமும் என்றின் னோரன்ன உறுப்புக்களைப் பெற்றுப் பண்ணும் ஓசையும் உடையவாய் யாப்பமைதி பெற்று வருதலின் பாட்டெனக்

கொள்ளவும் படாமல் பாட்டு இன்று எனத் தள்ளவும் படாமல் இசைத்தமிழின் நீங்கி இயற்றமிழ்க்குரிய வாய் வருதலின் ''பாட்டின் இயல'' என்றார்.

இது பண்ணொடும் இசையொடும்கூடி யாழொடும் முழவொடும் பொருந்தவரின் இசைத்தமிழ்ப் பகுதியாகும். இசையின்றிப் பண்ணளவாய் ஓசை பெற்று வரின் இயற்றமிழ்ப் பகுதியாகும்.

இயற்றமிழ்ப் பகுதியாய்ப் பண்ணுப்பெறுங்கால் தொடர்ச்சியின்றி இடையிடையே பெற்றுவரும் என்பது இதன் பெயராற் புலனாகும். அஃதாவது பண்ணினை அகத்தே உடையது (பண் அகத்து + இ) என்பது இதன் பொருள்.

இப்பாவகையாவது கழனிஉழவர் பாடும் மழைப் பாட்டும், வெள்ளப் பாட்டும், ஏர்ப்பாட்டும், நடவுப் பாட்டும், நெற்களப் பாட்டும், கிணைப்பொருநர் பாடும் போர்க்களப் பாட்டும், வெற்றிப் பாட்டும், கட்டுங்கழங்கும் காண்பார் பாடும் பாட்டும் போல்வன வாகும்.

'நாட்டுப்பாடல்' என இக்காலத்து வழங்கும் பாடல்கள் இப்பண்ணத்தி வழி வந்தவைகளேயாம். பள்ளு முதலாய சிற்றிலக்கியங்கள் இதன்வழித் தோன்றியவை எனலாம்.

எழுநிலத்தெழுந்த செய்யுள் கூறிய வழி இதனைக் கூறாமை யானும் அடிவரையில்லனவற்றைக் கூறி முடித்ததன்பின் இதனைக் கூறுதலானும், இதனைப் பிறன்கோட் கூறலாகக் கொள்வார் ஒரு சாரார், இதனைப் பிசியொடு ஒக்கும் என ஆசிரியர் கூறுதலான் பெரும்பான்மையும் உலகியல் வழக்குப் பற்றியே இவ்வகைச் செய்யுள் வழங்கின எனக் கொள்ளலாம். அதுபற்றி இதனை ஆசிரியர் புறனடை போலக் கூறினார் எனக் கருதலாம்.

இனி இச்சூத்திரம் இடைக்காலத்தெழுந்த இன வகைகளை அடக்கிக் கூறுவதாக வலிந்துரை கூறுவார் இளம்பூரணர். பேராசியர் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவனவென்றும், அவை நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும், வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயன என்றும் கூறுவார்.

உரையாசிரியன்மார் விளக்கங்கள் இதுபற்றிப் பின்வரும் மூன்று சூத்திரங்களொடும் இயையாமையின் அவை பொருந்துமாறில்லை என்க.

சூ. 181:- அதுவே தானும் பிசியொடு மானும்

கருத்து : பண்ணத்திக்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : யாப்பமைதியாற் பாட்டினியலவாய் வரும் பண்ணத்தி பொருளமைதியாற் பிசியொடு ஒத்து வரும்.

அஃதாவது அகப்பொருள் புறப் பொருள்களுள் கைக்கிளையையும் பாடாண்டிணையையும் அடிப்படையாகக் கொண்டு ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும், தோன்றுவது கிளந்ததுணிவினானும் வரும்.

பண்ணொடு கூடி வருதலின் சிறுபான்மை ஆளத்திமுறையில் இசைக்கப்படுதலும் கொள்க.

சூ. 182 : அடிநிமிர்பு கிளக்கின் ஈராறாகும்

கருத்து : பண்ணத்தியின் அடியளவு கூறுகின்றது.

உரை : பண்ணத்திச் செய்யுள் வகையின் அடியளவினைக் கிளந்து கூறின் அதன் பெருக்கம் பன்னிரண்டடியாகும்.

ஈர்ஆறாகும் என்னும் குறிப்பான் சுருக்கம் இரண்டடியாகும் எனக் கொள்க.

இச்சூத்திரம் அச்சிட்டபடிகளில் "அடிநிமிர்கிளவி" என உளது. "அடிநிமிர்பு கிளக்கின்" என்பதே உண்மையான பாடம் என்பது பேராசிரியர் உரையான் அறியக்கிடக்கின்றது.

அவ் உரையாவது :- "அப்பண்ணத்தியின் அடிப்**பெருங்கங் கிளக்குங்கால்** பன்னிரண்டாம்" என்பது. இங்ஙனம் உரை நோக்காது தவறாக அச்சிடப் பெற்றுள்ள சூத்திரங்கள் பல உள. சில இவ்வுரையுள் காட்டப்பட்டுள.

சூ 183 : அடியிகந்துவரினும் கடிவரையின்றே.

கருத்து : பண்ணத்திக்கு அடி பற்றிய தொருபுறனடை கூறுகின்றது.

உரை : "பாட்டினியல பண்ணத்தி" என்றதனான் அது நாற்சீரடியானே வருமென்பது பெறப்பட்டது. அங்ஙனமின்றி ஒரோவழி நாற்சீரடியின் இகந்து ஐஞ்சீரடி அறுசீரடிகளானும், இரு சீரடி முச்சீரடிகளானும் வரினும் நீக்கும் நிலை இன்று.

அடி என்றது எழுத்தளவையான் வரும் நாற்சீரடியினை "அடியிகந்துவரினும்" எனப் பொதுப்படக் கூறியதனான் மேற் கூறிய பன்னிரண்டடியினும் இகந்து வரினும் கடிவரையின்று எனவும் கொள்க.

ஏற்றப்பாட்டு முதலியவை இகந்து வருமாறு கண்டு கொள்க,

சூ. 184: கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே.

'அளவு' என்னும் செய்யுளுறுப்பினை முடிந்தது முடித்தல் என்னும் உத்திவகையான் முடித்துக் கூறுகின்றது. இதன்பயன் அளவென்பதற்குரிய இலக்கணத்தை உய்த்துணர வைப்பதாகும்.

உரை: ஒன்றனைப்பற்றி அளவு கூறுமிடத்து இவ்விவ்வாறு வகுத்துக் கூறல் வேண்டும் என அளவியலார் கூறும் இலக்கண முறையானே மேற்கிளந்தவற்றை ஆராயின் அளவியல் என்னும் உறுப்பு அத்துணை வகைப்படும்.

அளக்கும் முறையாவது ஒரு பொருளின் வண்ணம், வடிவு அளவுகளை, செய்கை, உறுப்பு, உணர்வு, பயன் முதலியவாக அளத்தல்.

அவ்வகையானே எழுத்திற்கு மாத்திரை கூறுவதுமுதலாக எழுத்து அசைசீர் அடி தொடைகளுக்கு எண்பற்றிய அளவு கூறுதலும், உறுப்பு அளவு கூறுதலும், உறுப்பினானாகிய பாக்களை யும் அவ்வவற்றின் உறுப்புக்களின் அளவு கூறுதலும், அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் கூறுதலும், பெருக்கம் சுருக்கம் கூறுதலும், உடன்பாட்டாற் கூறுதலும், வரையறை இன்று என எதிர் மறுத்துக் கூறுதலும், பிறவும் எல்லாம் விளங்க எடுத்தோத் தானும் உத்தி வகையானும், விதப்பானும் கூறியவற்றையெல்லாம் அடக்கி "அளவியல் வகையே அனைவகைப்படுமே" என்றார் என அறிக.

மேல் "அளவியல் வகையே அனைவகைப்படுமே" (சூ-) என்றது அறுவகைப் பாக்களுக்கும் அவை பெறும் உறுப்புக்களுக்கு மட்டுமேயாம். ஈண்டுக் கூறியது. இதுகாறும் கூறப்பெற்ற எழு வகை நிலத்தையும் அடக்கி இனிக் கூறப்பெறுவனவற்றிற்கும் இலக்கணம் பெறும் வகையில் முடித்துக் காட்டியதாகும். ஆதலின் இது கூறியது கூறலாகாமை அறிக.

சூ. 185: கைக்கிளை முதலா ஏழ்பெருந் திணையும்
முற்கிளந் தனவே முறை (மை) யினான,

**கருத்து :** நிறுத்த முறையானே 'திணை' என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறுகின்றது.

**உரை :** திணை என்பது கைக்கிளை முதலாகப் பெருந்திணையீறாக ஏழு பெரிய திணைகளும் ஆம். அவை முறையானே மேற்சொல்லப்பட்டவைகளேயாகும்.

வெட்சி முதலாய ஏழும் குறிஞ்சி முதலியவற்றின் புறத்திணைகளேயாதலின் அவை வேறல்ல இவற்றுள்ளே அடங்குமென்பார் "ஏழ்பெருந்திணையும்" என்றார்.

திணை என்னும் தலைமைப்பாடுடையவை இவையே என்பதனை முற்படக் கிளந்த எழுதிணை" (அகத்-சூ-1) என்றதனான் அறிக. முற்பட என்றது தலைமைப்பட என்றவாறு, புறத்திணைகள் கைகோள் வகை பெறாமையும் உணர்க.

சூ. 186 காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடும்
மறையென மொழிதல் மறையோ ராறே.

**கருத்து :** நிறுத்த முறையானே கைகோள் என்னும் செய்யுளுறுப்பாமாறு கூறத் தொடங்கி அஃதிரு வகைப் படுதலின் அவற்றுள் ஒன்றாகிய களவின் இயல்பு கூறுகின்றது.

**உரை :** இயற்கைப் புணர்ச்சியும் அதன் சார்பும் இடந்தலைப் படலும் அதன் சார்பும் பாங்கொடுதழாலும் அதன் சார்பும் தோழியிற் கூட்டமும் அதன் சார்பும் என மேற்கிளந்தனவாகிய நான்கும் களவொழுக்கம் எனச் சொல்லுதல் களவியலிலக்கணம் கூறும் புலவர் நெறியாகும்.

அதிகாரமுறைமை என்னும் உத்தியான் "முற்கிளந்தனவே" என்பது கூட்டப்பட்டது. அன்றி 'ஆங்க' என்பதனாற் கொள்ளினும் அமையும்.

அடைந்த சார்பென்றது ; வன்புறை-மதியுடம்பாடு அறத்தொடு நிற்றல் குறியீடு முதலியவற்றையாம், மறுமைக்குரிய உறுதி கூறும் பெய்ப்பொருள் நூலை மறை என்று வழங்குமாறு போல இம்மைக்குரிய இன்பப் பகுதியாகிய இசையையும், காமத்தையும் தெய்வப் பகுதியாகிய மந்திரத்தையும் கூறும் நூல்களை மறை என வழங்குதல் தமிழ்ச் சான்றோர் வழக்காகும்.

கைகோள் இரண்டனுள் களவு முன்னிகழ்தலானும் நாடக வழக்கும் உலகியல் வழக்கும் பொருந்தச் செய்யுள் செய்தற்குச் சிறத்தலானும் "மறையென மொழிதல் மறையோராறே" எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது.

சூ 187 : மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயல்நெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடும் புணர்ந்தது கற்பெனப்படுமே.

கருத்து : கைகோளுள் பிறிதொரு வகையாகிய கற்பின் இயல்பு கூறுகின்றது.

உரை : வரைவு மலிதல் உடன்போக்கு முதலியவற்றால் புறத்தார்க்குக் களவு வெளிப்படுதலும், களவின்றித் தலைமக்கள் தமர் வதுவை கூட்டித் தரப்பெறுதலும், இவைமுதலாக அறநெறி திரியாது கூடுதலும் விருந்தோம்பலும் ஆகியவற்றான் மலிதலும், அன்பு மேலிட்டான் வரும் புலவியும், தலைவனின் பரத்தைமை காரணமாக வரும் ஊடலும், வாயிலாரானும் ஆற்றாமையானும் உணர்த்தப்பெறும் உணர்வும், ஓதல் முதலாயவற்றான் நிகழும் பிரிவும் ஆகிய இவற்றொடு பொருந்தி நிகழும் ஒழுக்கம் கற்பென்று கூறப்படும்.

களவென்பது பெற்றோரும் புரப்போரும் அறியாது நிகழ்வ தாகலின் அவர் அறிந்த காலையே அது கற்பின் பாற்படுமென்பார் "மறைவெளிப்படுதலும்" என்றார். அஃது உடன்போக்கு–கற்பொடு புணர்ந்த கௌவை முதலியவாம்.

தமரிற் பெறுதல் என்பது கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதாகும். இவை முதலாகிய என்றது கொடுப்போரின்றிக் கரணமொடு புணர்தலும் பிறவுமாம். துனி, ஊடலுள் அடங்கும். பிற விளக்கங்கள் களவியலுள்ளும் கற்பியலுள்ளும் கண்டு கொள்க.

சூ. 188: மெய்பெறு மவையே கைகோள் வகையே

கருத்து : கைகோள் இவ் இருவகையே என்கின்றது. இது பின்னது நிறுத்தல் என்னும் உத்திவகை.

உரை : பொருள்பெற மேற்கூறப்பெற்ற களவும் கற்புமே கைகோள் வகையாகும்.

சூ. 189 : பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தியொடு
அளவியன் மரபின் அறுவகை யோரும்
களவினிற் கிளவிக்கு உரியர் என்ப.

கருத்து : நிறுத்தமுறையானே "கூற்று" என்னும் செய்யுளுறுப்பா மாறு கூறத் தொடங்கிக் களவின்கண் கூற்று நிகழ்த்து தற்குரியார் இவர் எனக் கூறுகின்றது.

உரை : பார்ப்பானும் பாங்கனும் தோழியும் செவிலியும் சீரிய தகவுடைய சிறப்பினரான தலைவனும் தலைவியும் என உரையாடுதற்குரிய மரபினையுடைய அறுவகையோரும் களவென்னும் கைகோளிடத்துக் கூற்று நிகழ்த்துதற்கு உரியர் எனக் கூறுவர் புலவர். பார்ப்பான் முதலியவை தொகுதி ஒருமை. அவர்தாம் பலராதலின் அறுவர் என்னாது அறுவகையோர் என்றார். இது வரும் நூற்பாவிற்கும் ஒக்கும்.

"அளாவியன் மரபின்" என்பது எதுகை நோக்கிக் குறுகி நின்றது அளாவுதல் = கலந்துரையாடல்.

இருவகை ஒழுக்கத்திற்கும் உரியவர் தலைவனும் தலைவியுமே யாகலின் 'சீர்த்தகு சிறப்பின் கிழவன் கிழத்தி' என்றார் ஒடு எண்ணுப்பொருளது.

பாங்கனும் தோழியும் கிழவனொடும், தோழியும் செவிலியும் தலைவியொடும், பார்ப்பான் தலைவி ஒழிந்த ஏனையரொடும் கூற்று நிகழ்த்துதல் மரபு என்பது தோன்ற "அளாவியன்மரபின்" என்றார்.

எ. டு. களவியலுள் கண்டு கொள்க.

சூ 190 : பாணன் கூத்தன் விறலி பரத்தை
ஆணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகுசிறப்பின் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற்குரியார்.

கருத்து : கற்பாகிய கைகோளின்கண் கூற்று நிகழ்த்துதற்குரியார் இவர் எனக் கூறுகிறது.

உரை : பாணனும் கூத்தனும், விறலியும் பரத்தையும் அன்பு சான்ற அறிவரும் கண்டோரும், பேணத்தக்க சிறப்பினையுடைய

பார்ப்பான் முதலாக மேற்கூறப் பெற்ற அறுவரொடும் கூடிப் பழமையான இலக்கண மரபினான் கற்பின்கண் கூற்று நிகழ்த்துதற் குரியராவர்.

இவர் ஐவரும் தலைவன் தலைவியரொடு கூற்று நிகழ்த்துதற் குரியார் என்பார் தொன்னெறி மரபின் கற்பிற்குரியார் என்றார்.

கற்பியலுள் ஓதிய பாட்டியை விறலியுள்ளும் இளையரைப் பாங்கனுள்ளும் அடக்கி ஓதினார் என்க. பாங்கரும் இளையரும் செயலாலன்றி வேறுவேறல்லர் என்க. இதனை உழைக்குறுந் தொழிலும் காப்பும், உயர்ந்தோர் நடக்கையெல்லாம் அவர்கட் படுமே—என்னும் கற்பியற் சூத்திரத்தான் அறியலாம். விருந்தினர் கூற்று நிகழ்த்துதற்குரியர் அல்லர் ஆதலின் நீக்கப் பெற்றது. அந்தணர், அறிவர் என்பதனுள் அடங்கும். பாகர் கேட்போரே யன்றிக் கூற்று நிகழ்த்துவோராய் வருதல் புலநெறி வழக்கின்று என்க. தொன்னெறி மரபென்றதனான் நற்றாய் கூற்றுச் சிறு பான்மை வருமெனக் கொள்க.

சூ. 191 : ஊரும் அயலும் சேரி யோரும்
நோய்மருங் கறிதரும் தந்தையும் தன்னையும்
கொண்டெடுத்து மொழியப் படுதலல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்

கருத்து : அளாவியல் மரபாகிய நேர்க்கூற்றிற்கு உரியராகாதார் இவர் எனக் கூற்றுறுப்பிற்குப் புறனடை கூறுகின்றது.

உரை : ஊராரும், அயலவரும், சேரியோரும், தலைமக்களின் பாங்கிருந்து அவர்தம் துயர் அறிவோரும், தந்தையும், முத்தோரும், கூறும் கூற்றுக்கள் செய்யுள் செய்யும் புலவோரானும், தோழி முதலாய பிற உறுப்பினரானும் எடுத்துக் கூறப்படுவதல்லது அவர் தாமே நேர்க்கூற்றாகக் கூறுதல் இருவகைக் கைகோளினும் இன்மை வலியுடையதாகும்.

நல்லிசைப் புலவோர் இலக்கியத்தான் இந்நெறி புலப்படு மென்பார் "யாப்புறத் தோன்றும்" என்றார். ஊரார் என்றது உள்ளூரினரை. அயலார் என்றது ஊர்ப்புறத்தவரை. சேரியோர் என்றது பரத்தையின் பாங்காயினாரை. தன்னை = (தன் + ஐ) என்றது உடன்பிறந்தோருள் மூத்தோரையும் தந்தையையும் குறிக்கும்.

எ-டு களவியல் முதலியவற்றுள் கண்டுகொள்க.

சூ. 192 : கிழவன் தன்னொடும் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத்தோன்றாது

கருத்து : நேர்க்கூற்றிற்குரியார் கூற்றுப் பற்றியதொரு விதி கூறுகின்றது

உரை : தலைவனிடத்தும் தலைவியிடத்தும் நற்றாய் நேர்க் கூற்றாகக் கூறுதல் முற்றாகத் தோன்றாது.

எனவே செவிலியொடும் தந்தை தன்னையரொடும் அறிவரொடும் கூறுதல் தோன்றுமெனக் கொள்க.

சூ. 193 : ஒண்டொடி மாதர்கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப

உரை : ஒள்ளிய தொடியினை அணிந்த காதன்மை சான்ற ஆயத்தார், செவிலி, நற்றாய், தலைவன், தலைவி, ஆகிய இவரொடு கண்டோர் மொழிதல் இலக்கியத்துட் கண்ட மரபு எனக் கூறுவர் புலவர்.

கண்டோர்-என்றது: தலைவனும் தலைவியும் உடன்போக்கின் கண் இடைச்சுரத்துக் கண்டோரை. அதனான் அஃது அவர்க்குக் காரணப் பெயராயிற்று.

மாதர் என்றது ஆகுபெயர். அது தலைவன் தலைவியர்பால் அன்புடைய பெண்டிரைச் சுட்டி நின்றது.

சூ 194 : இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கும் உரியன்.

கருத்து : தலைவன் கூற்றிற்காவதோர் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை: தலைவியொடு உடன்போக்கின்கண் இடைச்சுரத்தின் பால் தலைவன் தலைவியிடத்து உலக வழக்காகிய ஆணையினால் வீறுகோளுரை கூறுதற்கும் உரியன்.

என்றது தலைவி சுரத்தின் கொடுமையை மறக்க மெல்லிய இனிய காதல் மொழி பேசுதற்குரிய தலைவன் இடைச்சுரத்துத் திரியும் வேட்டுவர் முதலானோரால் துயர் நேருமோ எனத் தலைவி தன்னகத்தே அச்சமுற்று வருதலைக் குறிப்பாலுணருங்கால் அவள் அச்சத்தை நீக்க வீறுமொழி கூறற்கும் உரியன் என்றவாறு உம்மை அன்புமொழி கூறுதலைச் சுட்டி நின்றது.

எ-டு: "நுமர்வரின் ஓர்ப்பின் அல்லது அமர்வரின்
முந்நீர் மண்டலம் முழுதும் ஆற்றா
தெரிகணை விடுதல் ஓவிலனே
அரிமதர் மழைக்கண் கலுழ்வதை எவனோ"
(நச்-உரை-மேற்)

"நீவிளையாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய பாரரைவேங்கை
மணலிடு மருங்கில் அரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவன் மாஅ யோளே" (நற்-362)

என்றாங்கு வரும்.

தலைவியைத் தேற்றுதற்பொருட்டுக் கூறலின் தற்புகழ்ச்சி யாகா தென்றறிக. அங்ஙனம் கூறுதல் வழக்கென்பது தோன்ற "வழக்கியல் ஆணை" என்றார்.

சூ 195: ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே

கருத்து: ஏனையோர் கூற்றிற்காவதோர் சிறப்புவிதி கூறுகின்றது.

உரை: நற்றாயும் கண்டோரும் ஒழிந்த எனையோர் தலைவன் தலைவியொடு மரபானே கூற்று நிகழ்த்துங்கால் மேல் அகத்திணை யியல் முதலியவற்றுள் மொழிந்தவாறு முன்னத்தின் எடுத்துக் கூறுதற்கு உரியார்.

முன்னமாவது: இடமும், செவ்வியும் தத்தம் தகுதியும் பற்றிய குறிப்பு.

அஃதாவது பாங்கன் சுழறிக் கூறுதலும், பரத்தை தன்னைத் தலைமை செய்து கொண்டு கூறுதலும் பிறவும் அறக்கழிவுடையன அல்ல என்பார் மொழிந்தாங்குரியர் என்றார்.

எ-டு: மேலை இயல்களுட் கண்டு கொள்க.

சூ 196: மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்
நினையுங்காலை கேட்குநர் அவரே.

கருத்து: நிறுத்தமுறையானே கேட்போர் என்னும் செய்யு ளுறுப்பு ஆமாறு கூறுகின்றது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# தொல்காப்பியம் சொல்லதிகாரம் தெய்வச் சிலையார் உரை *

பண்டைத் தமிழ் நூல்களுள் இன்னும் அச்சிடப்பெறாத ஏட்டுச் சுவடிகளையும் அவற்றையுடையார்களையும் அளந்தறிதலாகாமையின், இத்தொல்காப்பியம் முழுமைக்குமோ, அன்றிச் சிலபல பகுதிகட்கோ உரைகண்டார் இவரிவரேயென அறுதியிட்டுக் கூறுதல் இயலாது; கூறுதல் காலப்போக்கிற் பிழைபடுவதாகும். பழைய நூலுரைகளை அச்சிட்ட பேரறிஞர்கள் தாம் அச்சிட்ட நூல்கட்கு எழுதிவந்திருக்கும் முன்னுரை, பதிப்புரை முதலாயவற்றைத் தொடர்புற நோக்குவார்க்கு, பண்டை நூல்களின் பெயர்கள் அவற்றை ஆக்கியோர் பெயர்கள், அவற்றிற் கூறப்பெறும் பொருள்கள், அவற்றின் உரைகள் முதலாயவற்றிற் காலந்தொறும் எய்தியுளவேறுபாடுகள் இனிது புலப்படும். வேறு கூறுவானேன் ? தொல்காப்பியச் தொல்லதிகாரத்திற்கு இவ்வுரை யொன்றுளதெனப் பெரும்புலவருட் பலரும் சிலகாலங்கட்கு முன்வரை உணர்ந்திலரன்றோ ? எனவே இதுகாறும் அச்சிட்டிருப்பவைகளைக் கண்டும், அறிஞர் கூறுவதைக் கேட்டும் உணரும் அளவில் தொல்காப்பிய உரைகளென இதுபோது கூறத்தக்கன எழுத்ததிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகளும், சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார் (இவ்வுரையாளர்), நச்சினார்கினியர், கல்லாடர் என்பார் உரைகளும், பொருளதிகாரத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் எனும் இவர்கள் உரைகளுமேயாகும். பேராசிரியரும் கல்லாடரும் தொல்காப்பியம் முழுவதற்கும் உரை கண்டவர் என்பதும், இளம்பூரணரின் வேறாக உரையாசியரியர் என்பாரொருவர் உளர் என்பதும் உண்டு.

சொல்லதிகாரத்திற்குரியனவாய் மேற்கண்ட ஐவர் உரைகளுள் கல்லாடர் உரை வெளிவராமையின் அதுபற்றிச் சொல்லாடற்கொன்றுமிலது. எவற்றினும் முன்னையதெனக் கூறப்பெறும் இளம்பூரணர் உரையினைப் பின் தொடர்ந்து சேனாவரையரும், இவ்விருவர் உரையினையும் பெரிதும் பின் தொடர்ந்து நச்சினார்க்கினியரும் உரையெழுதியிருப்பது அவற்றைப் பயின்றார் யாவரும் அறிவர். ஆனால் இவ்வுரையோ, அவற்றுள் எவற்றிற்கும் பின்னையது அன்றி முன்னையது ; எவர் உரையின் எப்பகுதியை மேற்கொள்ளுகின்றது அன்றி மறுக்கின்றது ; இவ்வுரையின் எப்பகுதி எவரால் மேற்கொள்ளப்படுகின்றது அன்றி மறுக்கப்

* பதிப்பருமை கருதித் தமிழ்ப்பல்கலைக்கழகம் 1984 ஆம் ஆண்டில் இதனை நிழற்படப் பதிப்பாக வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

படுகின்றது என்பன போன்ற ஆராய்ச்சிகள் செய்து முடிவு கட்டற்கு எளியதொன்றாகவிலது. இளம்பூரணர் முதலியோர் கொள்கைகள் மறுப்புக்கள் சில இதன்கண் காணப்பெறுகின்றன. அவற்றாற் பெற்றதென்? மற்று, இவ்வுரைக்கொள்கைகளின் மறுப்புக்கள் போல்வனவும் ஒரோ வழி அவ்வுரைகளிற் காணப் பெறுகின்றன! இவ்வுரையாளர் எவர் பெயரையும் எவ்விடத்தும் கூறிற்றிலர்; அங்ஙனமே இவர் பெயரையும் எவரும் எங்கும் கூறினாரிலர். இளம்பூரணர் முதலோர் உரைப்போக்கு நடைப் போக்குகள் வேறு; இவர் உரைப்போக்கு நடைப்போக்குகள் வேறு. இவ்விருவகையினரும் கொண்ட நூற்பாக்களின் பாடம், அடிகள், முறைவைப்பு முதலாயவே பல்லிடங்களில் வேறுபடுவன. இங்ஙனம் பல்லாற்றானும் வேறுபட்டு நிற்கும் இவ்விரு வகையுரைகளையும் ஒருங்கு வைத்து ஆராய்ந்து முடிவு காண்டல் ஆராய்வார்க்குப் பேரூக்கத்தினையும், பெருமகிழ்வினையும் விளைப்பதொன்றாகும். இதன்கண் நன்னூல் மயிலைநாதர் உரையுடன் ஒற்றுமைப்படும் பகுதிகள் பலவுள. இவ்வுரையினுள், சமயப்பற்று மிக்க பிற்காலத்தினர் ஒருவர் எழுதிச் சேர்த்த சிற்சில பகுதிகளும் உளவோ எனும் ஐயம், இதனை அச்சிடற்கு கிடைத்த முதலேட்டிற்கும் இரண்டாவது ஏட்டிற்கும் உள்ள சில வேறுபாடுகளாலும் வேறுசில குறிப்புக்களாலும் உண்டாகும். நிற்க. இவ்வுரை, சொல்லழகு பொருளழகு திட்பநுட்பங்களில் எவ்வுரைக்கும் பின்னிடுவதொன்றன்று. பிறவுரைகளிற் காணலாகாத பல அரும் பொருள்களும் தெளிவுகளும் ஆங்காங்குக்கொண்டு வியப்பிப்பது இவ்வுரை. இதன்கண் வலிந்து கூறல், மெலிந்து போதல் முதலாய குறைகள் யாண்டுங்காண்டல் அரிது. இங்ஙனமாய இதன் தனிச்சீர்கள் விரிப்பிற் பெருகும்.

நம் தமிழ்ப்பொழிலின் அரிய அணிகலன்களின் ஒன்றாக வைத்தெண்ணற்குரிய இவ்வுரையேடு ஒன்று, தஞ்சைமாநகரில் சரபோஜி மன்னர் பெரும் புகழோடு விளங்கியொளிரும் கலைமகள் மன்றத்தே (சரசுவதிமால்) உளதெனத் தமிழ்ப்பெரும்புலவர் சிலர் பல்லாண்டுகளுக்கு முன்னரே இரண்டோரிடங்களிற் குறித்துள்ளார். எனினும் பலகாலம்வரை இதனை அச்சிடக்கருதி முன்வருவாரிலராயினர். இச்சரர்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், திரு. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் மேற்கூறிய கலைமகள் மன்ற நூல் நிலையத்தின் மேற்பார்வையை யெய்திய தொருகாலத்தே, அங்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த தமிழ்ப் புலவர் திரு எல். உலகநாத பிள்ளையவர்கள் வாயிலாக இந்நூலினை எடுத்துப் பார்த்து, இதன் அருமை பெருமைகளை யுணர்ந்து, இதனை அச்சிடும் அவாவெய்தினர். அதன்மேல், இச்சங்க உறுப்பினரும், தமிழ்ப் பெரும் புலவருமாகிய

பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியாரவர்கள் இதனை யுணர்ந்து, விரைவில் அச்சிட்டு வெளியிடத் தூண்டியதோடு, தமது அரிய நண்பரும், இச்சங்க உறுப்பினரும், பெருந் திருவினருமாகிய பலவான்குடி ராம. கும. சு. குமரப்பச் செட்டியாரவர்களிடம் இதனை அச்சிடற்குப் பொருளுதவி செய்ய வேண்டினர். அவர்கள் அன்புடன் ஏற்று, ஒரு பெருந்தொகையினை உடன் தந்துதவினர். பின்னர், இச்சங்கம் இவ்வேலையினை மேற்கொண்டு செய்து முடித்தலை என்பாற் பணிந்தது. என் தகுதியினை நோக்காது கடன் நோக்கி ஏற்ற யான், இவ்வேட்டினைப் பெற்றுப் பார்த்த காலை, இது, சில ஏடுகள் முழுவதும் இன்றியும் சில ஏடுகள் பாதியில் முரிந்தும் சில பொடிந்தும் போய்விட்டமையின் மிகப் பழுதுபட்டிருப்பதும்; கற்றறிஞர் எவராலும் எழுதப்பெறாது கூலிக்கு எழுதுவோர் எவராலோ எழுதப்பெற்றதால், ண, ன, ந; ல, ள, ழ - வேறுபாடுகளும் பிறவும் தேறாமையான் எழுந்த எழுத்துப் பிழை சொற்பிழைகளும் ஒருமை பன்மைப் பிறழ்ச்சி முடிபுகள் முதலாய சொற்றொடர்ப் பிழைகளும் மல்கியும், சிலவிடங்களில் நூற்பாவின்றியும், சிலவிடங்களில் உரைகளின்றியும், சிலவிடங்களில் அவை பிறழ்ந்தும் காணப்பெற்றமையின் பல்லிடங்களிற் பொருள்துணிதற் கியலாதவாறிருப்பதும் காணலாயினேன். இதன் பிரதியென நூனிலையாளர் எழுதி வைத்திருப்பதொன்றுளதேனும், அது, பிரதி செய்தோரால், இடைவெளியுற்ற பகுதிகள் இணைக்கப்பெற்றும், குறையுற்றிருந்த நூற்பாக்கள் சில சொற்களால் முடிக்கப்பெற்றும் இன்னோரன்ன பிற புத்தாக்கம் பெற்றும் இருப்பதால் இவ் வேலைக்குப் பயன்படாததாயிற்று. அரித்துவாரமங்கலத்தில் புலவரும், புலவரைப் போற்றும் செல்வருமாகவிருந்த வா. கோபால சாமிரகுநாதராசாளியாரவர்கள் வீட்டில் இவ்வேட்டின் பிரதி யொன்றிருப்பதுணர்ந்தேன். ஆங்குச்சென்று அரிதிற்றேடிக்கண்ட அப்பிரதிதானும், மேற்கூறிய பிரதிபோன்ற தொன்றேயாயிருந்தது. எனினும், இது, சிறிது முற்காலத்தில் எழுதப்பெற்றதொன்றாயினமையின், இவ்வேட்டில் இப்பாற் பொடிந்துள சில பகுதிகளைக் கண்டுகொள்ளுமளவில் உதவியாயிருந்தது. வேறு ஏடுகள் பெற வேண்டிப் பழைய ஏடுகள் இருக்கும் இடங்களெனத் தெரிந்த சில்லிடங்களில் கேட்டுப்பார்த்தும் ஒன்றும் கிடைத்திலது. இவ்வளவில் இவ்வொற்றை ஏட்டினை, பிழைமலி ஏட்டினை, சிதைவுறும் ஏட்டினைக் கொண்டு அச்சிடல் பெரியதோர் அச்சத்தினை விளைத்ததேனும், இவ்வேடு 'நென்னற்கண்ட திருமேனி யின்று பிறிதா நிலைதளரும்'' நிலையிலிருந்ததால், காலந்தாழ்த்தலில் உண்டாகும் ஏதப்பாடு அதனினும் காட்டில்

அச்சம் விளைத்தமையின், உடனே தொடங்கி முடிக்கும் இன்றியமையாமை எய்தியது.

பண்டைத்தமிழ் நூல் ஏடுகளை அச்சிடுவதென்பது எளிய வேலையன்று. ஆழ்ந்தகன்ற பயிற்சியும். கூர்ந்து கூர்ந்து செல்லும் மதிநுட்பமும் ஏட்டுச்சுவடியிற் பன்னெடுங்காலப் பழக்கமும், சிறந்த பயிற்சியுடையார் துணையும் உடையாரே பண்டைத் தமிழ் நூலேடுகளை அச்சிடற்குரியார். இன்னோர் தாமும், தாம் அச்சிடப்புகும் நூலிற்குப் பற்பல ஏட்டுப்பிரதிகள் தேடிவைத்துக் கொள்ளல் வேண்டும். அவற்றுள் ஒன்றிரண்டேனும் சிறந்த புலவர் கைப்பட்டனவாய் அன்றிச் சிறந்த பயிற்சி யுடையோரால் எழுதப்பெற்றனவா யிருத்தல் வேண்டும், இவர், தாம் அச்சிட எடுத்துக்கொள்ளும் நூலுரைகளைப் பன்முறை பயின்று அந்நூற்பொருள் முழுவதையும் சிலையெழுத்தெனத் தம் மனத்தகத்தே பதிப்பித்துக்கொண்டு, அவ்வுணர்ச்சியோடு பண்டைத்தமிழ் இயனூல் செய்யுணூல்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து, ஒப்புமைப் பகுதிகள், மேற்கோள் விளக்கங்கள் முதலாயவற்றைத் திரட்டிக் கொள்ளல் வேண்டும். இங்ஙனமெல்லாம் பண்டைநூற் பதிப்பிற்குச் செயத்தகும். முன் வேலைகள், பின்வேலைகள் பலப்பலவாகும். ஆயினும், மேற்கூறியாங்கு உடன் அச்சிடவேண்டும். இன்றியமையாமை நோக்கியே, குற்றறிவும் குறும்பயிற்சியும் பெரும் மறதியும் மிகு சோர்வும் பிற குறைபாடுகளும் கொண்ட யான், ஏட்டுச்சுவடி என்பதனையே கேட்டு மறியாத யான், தக்கார் துணையொன்றும் வாய்க்கப்பெறேனாய், பல்வகைக் குறைபாடுகளையெல்லாம் கொண்ட இவ்வேடொன்றையே துணைக்கொண்டு, ஏதோ இயன்ற ஒருவாறு அச்சிட்டு முடித்தேன். இதன்கண் பல்வகையான பிழைகளும் மலிந்திருத்தல் கூடுமென யான் உணரேனல்லேன் உணர்ந் தஞ்சேனல்லேன்; அஞ்சி அஞ்சியும் அச்சிட்டது, ஒன்றே ஒன்றைக் கருதியதாகும். அஃதாவது, இதில் என் மனமாரச் செய்த ஆக்கல், அழித்தல், திரித்தல் முதலாய செய்கைகள் இலவாகலின், நாளும் நாளும் பழுது பட்டொழிந்துவரும் இவ்வேட்டின் ஒரு நேர் பிரதியாக இது நின்று, பிற்காலத்து அச்சிடும் பெரியார்கட்கு ஒருவாறு உதவி செய்யும் என்று எண்ணிய தொன்றேயாகும். ஒரு பெரிய நூலை அச்சிட்டதொரு பிழையினை இதுபற்றியேனும் தமிழுலகம் பொறுத்திடுவதாக.

இனி, இவ்வேட்டின் இறுதியில் 'ஆத்திரேய கோத்' என்னுஞ் சொற்கள் இருந்தனவென்றும், ஆதலால் இது ஆத்திரேய

சோத்திரத்துப் பேராசிரியர் உரையென்றும் பேரறிஞர் சிலர் எழுதியுள்ளார். அதுபற்றி, முதலில் இந்நூலிற்குப் பேராசிரியர் உரையெனும் பெயர் தந்திடப்பெற்றது. அங்ஙனமே நூலைப் பற்றிய விளம்பரங்களும் செய்யப்பெற்றன.

பின்னரே நூலின் பெயரையும் ஐயரவர்கள் தந்த ஏட்டின் முன்னும் பின்னும் கண்டவாறு தெய்வச்சிலையார் உரையெனக் கொள்ளலாயிற்று.

இனி, இவ்வரிய ஏட்டுச்சுவடியினைப் பேணிவைத்திருந் துதவிய தஞ்சைக் கலைமகள் மன்றத்தாருக்கும், தாம் வைத்திருந்த இதன் பிரதியை அன்புடன் தந்துதவிய அரித்துவாரமங்கலம் இராசாளியாரவர்கள் குடும்பத்தினருக்கும், இரண்டாம் ஏட்டினைத் தந்துதவிய தமிழ்ப்பெரியார் ஆய ஐயரவர்கட்கும் இந்நூலின் வெளியீட்டிற்குப் பல்லாற்றானும் முதன்மையாளராகிநின்ற பண்டிதமணியவர்கட்கும், இச்சங்கதலைவரவர்கட்கும் என் மனமார்ந்த நன்றியறிவினையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நலம்.

விரிந்த வுலகில் வியப்பார் பொருளாய்ச்
செறிந்த பலவுட் சிறந்து – தெரிந்த
பொருள்ஓங்கு நூலோர் புரிபுன் னகைக்காம்
சிறுநூலு மோரேன் செயல்.

**ஆர். வேங்கடாசலம்.**

---

## இரங்கற்பா

மன்னுதமிழ்க் கலைவளர்த்து மதியளிக்க
உருவெடுத்த மணியே யென்கோ!

தொன்னூல்கட் குரைதந்து தூய்செய்த
சுடரென்கோ! பதியே யென்கோ!

பன்னரிய நயங்கண்டு பாடுற்ற
அறிவென்கோ! அமுதே யென்கோ!

கன்னன்மொழி தருகரந்தைக் கவியரசே
கரந்தனையோ அந்தோ! அந்தோ!

**ச, சுந்தரேசன்**, புலவர் மாணவன், மயிலம்.

கரந்தைக் கவியரசர் நினைவுமலர். ப 25.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

## பாரதியின் புதிய ஆத்திசூடி

சு. பாரதி
தமிழ்த்துறை
காயிதே மில்லத் அரசு
மகளிர் கல்லூரி, சென்னை-2

பெண்ணடிமை ஆழமாக வேரூன்றிய காலத்தில் தோன்றிய ஔவையார் 'தையல் சொல்கேளேல்' என்று கூறினசர். புதுமைப் பெண்ணைப் படைத்து,

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்

என்றும்,

பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை யில்லை'[15]

என்றும் இருபதாம் நூற்றாண்டில் முழங்கிய முதற்கவிஞன் பாரதியே. பெண் விடுதலை அடைந்தால் தான் நாடு விடுதலை அடையும் என்றும் உறுதியாகக் கூறிய பாரதி 'தையலை உயர்வு செய்[16] என்று கூறியதில் வியப்பேதும் இல்லை. இவ்வாறு பாரதியின் ஆத்திசூடியில் பெரும்பான்மையான கருத்துகள் நாட்டு விடுதலை உணர்வை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

சமுதாயத்தின் மீது பற்று உடையவனுக்குத்தான் நாட்டுப் பற்றும் இருக்க முடியும். தனி மனிதன் உயர்வடைய வேண்டும், சிறப்படைய வேண்டும் என்று பாரதி விரும்பினார். அதனால் தனிமனிதனுக்கு இருக்க வேண்டிய, பண்புகளையும் கொள்கை களையும் வகுத்துக் கூறுகிறார். ஔவையார் வாழ்ந்த காலம் கூட்டுக் குடும்பம் நல்ல முறையில் இயங்கி வந்தது. அக்குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தம் கடமையை உணர்ந்து குடும்பம் நல்ல முறையில் இயங்குதற்குத் தம்மாலான உதவியைச் செய்தனர். ஆனால் இக்காலத்தில், கிளைகள் அதிகமாகும்போது துன்பங் களும் தொல்லைகளும் அதிகமாகும். எனவே மனிதன் தொல்லை களைக் குறைத்துக்கொண்டு வாழ்வதே சிறந்தது என்பதாலும், தனித்தனிக் குடும்பமாக வாழும்போது உயர வாய்ப்பிருக்கிறது

15. பாரதியார் கவிதைகள் - பாரதி அறுபத்தாறு - 45
16. பா - கவிதைகள் - புதிய ஆத்திசூடி 50

என்பதாலும் கூட்டுக் குடும்பத்தின் குறைபாட்டை நன்குணர்ந்த பாரதியார் "கிளை பல தாங்கேல்"[17] என்று அனுபவித்துக் கூறுவதுபோல் கூறுகிறார்.

பிறருக்குக் கொடுப்பதை யாரும் தடுத்ததில்லை. ஔவை கூட 'ஈவது விலக்கேல்' என்றுதான் கூறினார். ஆனால் புதுமையை விரும்பும் பாரதி, புதுமையாகச் சிந்திக்கின்றார். கொடுத்துக்கொண்டே இருந்தால் உழைத்து உயரவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் போய்விடும். மற்றவர் உழைப்பையே நம்பிச் சோம்பேறியாகப் போவான். எனவே ஒவ்வொரு மனிதனும் உழைக்க வேண்டும் என்று உழைப்பின் உயர்வைக் கூறி, அவ்வாறு உழைத்துப் பெற்றதைக் கொண்டு பிறருக்குக் கொடுக்கவும் வேண்டும் என்று 'ஈகைத் திறன்'[18] என்கிறார்.

'தனியொருவனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'[19]

என்று சமத்துவ சமுதாயம் அமைக்கப்பாடுபட்டவர் அவர் அதனால் கொடுப்பதின் பயனை உணர வேண்டும் என்று கூறினார். தனிமனிதன் செயலில் மட்டுமல்ல எண்ணுவதிலும் உயர்வாக எண்ணவேண்டும். 'மாற்றர் தம் உள்ளத்தனையது உயர்வு' என்ற குறளின் கருத்தை ஏற்று 'எண்ணுவதுயர்வு'[20] என்று கூறுகிறார். நம் எண்ணம் உயர்ந்தால் வாழ்வு உயரும் அதனால் வாழ்வில் ஏற்றம் வரும். உயர்ந்த எண்ணங்கள் இருந்தால் வாழ்வில் இன்பம் நிறைந்திருக்கும். அதனால் சக்தி யிடம் வேண்டும் பொழுது கூட எனக்குப் பொன்னைக்கொடு பொருளைக்கொடு. நீண்ட ஆயுளைக்கொடு என்று வேண்ட வில்லை.

'எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்'.[21]

என்று வேண்டுகிறார்.

---

17. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 15
18. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 18
19. பா. கவிதைகள் — பாரத சமுதாயம்
20. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 7
21. பா. கவிதைகள் — தோத்திரப்பாடல்கள் — மஹா சக்திக்கு விண்ணப்பம்

பாரதி தம் கவிதைகளில் ஒற்றுமையின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார். ஒற்றுமையுடன் செயல்பட்டால்தான் உயர்ந்த வாழ்வு கிடைக்கும். ஒற்றுமை போய்விட்டால் அனைவர்க்கும் தாழ்வு தான் வரும் என்று தேசியபாடல்களில் ஒற்றுமையின் உயர்வை எடுத்துக் கூறுகிறார். நாட்டுவிடுதலைக்கு மட்டுமல்ல சமுதாய முன்னேற்றத்திற்கும் ஒற்றுமை மிகவும் தேவை, என்பதால் ஒற்றுமை வலிமையாம்'[22] என்று கூறினார். மேலும் ஒற்றுமையின் வலிமையை எடுத்துக்காட்ட ஆத்தி சூடியிலேயே 'கூடித்தொழில் செய்', 'யாரையும் மதித்து வாழ்'' [23] என்கிறார். நம்நாடு இயற்கை வளம் மிகுந்த நாடு. நாம் கூடித்தொழில் செய்தாலன்றி நம் விருப்பத்திற் கேற்ப அவ்வளத்தை எளிதாகப் பயன்படுத்த இயலாது. எனவே கூடித்தொழில் செய்'' என்று இயம்பினார்.

மேலும் சமுதாயம் சிறப்பாக இருந்தால் தான் நாடு சிறப்படையும் என்பதால் தனிமனிதனுக்குப் பல அற உரைகளைக் கூறுகிறார். 'கற்றது தொழுகு, கைத்தொழில் போற்று, ஞமலி போல் வாழேல், துன்பமறந்திடு, நன்று கருது, நினைப்பது முடியும், நுனியளவு செல், பணத்தினைப் பெருக்கு, மேழி போற்று, யௌவனங்காத்தல் செய், வௌவுதல் நீக்கு',[24] முதலிய கருத்துகள் மனிதன் ஒவ்வொருவனும் கடைப்பிடித்தால் சமுதாயம் உயர்வடையும் என்பதற்காகக் கூறப்பட்டவை. வள்ளுவர் கூறிய, 'நிற்க அதற்குத்தக' என்பதையே 'கற்றது தொழுகு' என்று கூறுகிறார் பாரதி. கற்ற வழியில் செல்லவில்லை எனில் அவன் கற்றுப் பயனேதுமில்லை; ஐந்தறிவு படைத்த விலங்காகவே நினைக்கப் படுவான்.

இன்றைய சூழ்நிலையில் நம் நாட்டில் வாணிகத்தையும் தொழில்களையும் பெருக்க வேண்டும். மேலை நாடுகளில் வாணிகத்திலும் தொழில் துறையிலும் ஏற்பட்டு வரும் பெரு வளர்ச்சியை இந்திய நாடும் பெற வேண்டும். நம் நாடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கி விடக் கூடாது என்பதால் 'கைத்தொழில் போற்று' என்று கூறினார்[25]. அடுத்து நாயின் அறிவின்மையும், அடிமை உணர்வும் விரும்பத்தக்கவையல்ல. நேர்மையாக உழைத்து உண்ண வேண்டும் என்று விருப்பும் மனிதன், வாலைக் குழைத்து நிற்கும் நாயின் செயலை விரும்புவதில்லை. அத்துடன்

22. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி — 10
23. பா. கவிதைகள் — புதிய ஆத்திசூடி 18, 37
24. பாரதியார் கவிதைகள் — புதிய ஆத்திசூடி 13, 21, 37, 46, 54, 59, 58, 65 82, 88, 110.
25. பாரதி பாநிலை — கா. மீனாட்சி சுந்தரனார் — பக்கம் 59